# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 273 | சனி, பெப்ரவரி 10, 2024 | 14 பக்கங்கள்




## மாலைதீவில் சீன ஆய்வு கப்பல்; இலங்கையில் இந்திய நீர்மூழ்கி

அகிலன்

## ஜே.வி.பி.யை அழைத்த டில்லி

## இராஜதந்திரமா? சமரசமா?

மூத்த ஊடகவியலாளர் தனபாலசிங்கம் செவ்வி



## பிரித்தானிய மன்னரை நோக்கி







## மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி




© 2024 இலக்கு இணையம்

# பெரும் போக வேளாண்மை செய்கை அறுவடையில் பாரிய வீழ்ச்சி

தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடையானது இயந்திரம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் இம் முறை அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட பத்து ஏக்கர் வன்னியனார் மடு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையாலும் ஒருவகையான நோய் தாக்கம் ஏற்பட்டமையால் நெற் செய்கை அழி



வடைந்துள்ளதுடன் விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஒரு ஏக்கருக்கு எட்டு தொடக்கம் பத்து மூடைகளுக்கும் குறைவாகவே கிடைக்கப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஊடகர்களுக்கு செயலமர்வு



கிழக்கு மாகாண பிரதேச தெரிவு செய்யப்பட்ட ஊடகர்களுக்கான செயலமர்வொன்று திருகோணமலையில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் இன்று (08) இடம் பெற்றது.

நாளை(09) உட்பட இரு நாட்கள் நடை பெறவுள்ள குறித்த செயலமர்வினை வெகுசன ஊடக அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. இதில் வெறுப்புப் பேச்சு ,தொடர்பாடல் முறை உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

முதல் நாளாகிய இன்றை தினம்(08) வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் வி.பி.கே.அனுச பல்பிட்ட கலந்து கொண்டு இவ்வாறு கருத்துரைத் தார்.

ஊடகவியாளர்களுக்கான கொள்கைகளை ஊடகவியலாளர்களே உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் ஊடக பட்டய நிறுவனம் ஒன்றை உருவாக்கி

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# முஸ்லீம் மக்களின் வீடுகளை இடிப்பதை இந்தியா நிறுத்த வேண்டும்

இந்தியஅரசுதொடர்ந்துமுஸ்லீம் மக்களின் இருப்பிடங்களை நீதிக்கு புறம்பாக இடித்து தரைமட்டமாக்கி வருவதாக அனைத்துலக மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளதுடன், இந்தியா அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என அது கோரிக்கை விடுத்துள்ளது.

முஸ்லீம் மக்கள் சிறுபான்மையாக வாழும் பல மாநிலங்களில் இந்திய அரசு அவர்களின் வீடகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்களை சட்டவிரேதமாக




இடித்து வருகின்றது. இது தொடர்பில் பல அறிக்கைகள் கிடைத்துள்ளன.

2022 ஆம் ஆண்டு மட்டும் இரண்டு மாதங்களில் 128 வீடுகள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகம் அதிகரிப்பு



சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகவும், கடந்த வருடம் அது 136.2 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளதாகவும் கடந்த புதன்கிழமை புதுடில்லியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போது இந்தியாவுக்கான சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 1.5 விகித அதிகரிப்பாகும். கடந்த ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளும் நல்ல தொடர்பாடல்களை பேணி வருவதுடன் கடந்த வருடம் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 6 விகிதம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் இடம்பெற்ற பிறிக்ஸ் மாநாட்டில் சீனாவின் அரச

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அமெரிக்காவின் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் இரு தலைவர்கள் பலி



ஈராக்கின் தலைநகரான பக்தாத்தின் கிழக்கு பகுதியில் ஈரானின் ஆதரவுடன் இயங்கும் கே எச் என அழைக்கப்படும் கதீப் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தலைவர்கள் இருவர் உட்பட 3 பேர் சென்ற வாகனம் மீது அமெரிக்காவின் எம்.கி-9 ஆளில்லாத தாக்குதல் விமானம் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில்அனைவரும்கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப் பட்டவர்கள் சியா முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர்கள்.

ஈராக்கை தளமாகக் கொண்ட ஈரான் ஆதரவுடைய இஸ்லாமிய எதிர்ப்பு படையணியின் ஆர்கன் அல் ஒலாயாவி மற்றும் அபு பக்கர் அல்-சாதி ஆகிய மூத்த தலைவர்களே கொல்லப்பட்டுள்ளனர். ஷாடி என்பவர் இந்த பிரிவின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பானவர்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அமெரிக்காவின் ஈரூடகப்படையினருடன் காணாமல் போன உலங்குவானூர்தி

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் சுப்பர் ஸ்ராலியன் வகை படைத்துறை உலங்குவானூர்தி ஒன்று 5 ஈருடகப்படையினருடன் கடந்த புதன் கிழமை(7) காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலங்குவானூர்தியை தேடும் பணிகளை அமெரிக்க படையினர் மேற்கொண்டு வந்திருந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை உலங்குவானுர்தி மலைப்பகுதி ஒன்றில் கண்டு



பிடிக்கப்பட்டபோதும் அதில் பயணம் செய்த படையினர் தொடர்பில் தகவல்கள் எதுவுமில்லை என தெரிவிக்கப் படுகின்றது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மூன்று கட்டங்களாக போரை நிறுத்துவது தொடர்பில் ஹமாஸ் பரிந்துரை

காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் படை நடவடிக்கையை நிறுத்தி இரு தரப்பும் தங்கள் வசம் உள்ள கைதிகளை பரிமாறிக்கொள்வது தொடர்பில் ஹமாஸ் அமைப்பினர் மூன்று அம்ச திட்டத்தை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



கட்டார் மற்றும் எகிப்த்து ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அரசுகள் மேற்கொண்டுவரும் பேச்சுக்களின் போதே ஹமாஸ் அமைப்பு இந்த திட்டத்தை முன்வைத்துள்ளதாக கடந்த புதன்கிழமை(7) தெரிவித்துள்ளது.


முதல் கட்டமாக ஹமாஸ் அமைப்பினர் தமது வசம் உள்ள கைதிகளை விடுவிப்பதுடன் இஸ்ரேல் 1500 கைதிகளை விடுவிக்க வேண்டும். இரண்டாவது கட்டமாக சேதமடைந்த பகுதிகளை புனரமைப்பது. அதன்போது எஞ்சிய கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவது. மூன்றாவது கட்டமாக நிரந்தர போர் நிறுத்தம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஆயுத பற்றாக்குறையினால் உக்ரைன் தோல்வியடையலாம்—ஜேர்மனி

உக்ரைன்- ரஸ்ய போரில் ரஸ்யா வெற்றியீட்டுவதை மேற்குலகம் தடுத்தாக வேண்டும். உக்ரைன் தோல்வி கண்டால் ஐரோப்பாவின் சூழல் மாற்றமடையலாம் என ஜேர்மனியின் அதிபர் ஒலோப் ஸ்கொல்ஸ் கடந்த புதன்கிழமை(7) தெரிவித்துள்ளார்.

உக்ரைன் படையினர் மிகப் பெரும் ஆயுதப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களுக்கான உதவிகளை தடை இன்றி வழங்கவேண்டும். அவ்வாறு செய்யாது விட்டால் உக்ரைன்



தோல்வியை தழுவுவது உறுதி.

மேற்குலக நாடுகள் வழங்கிய உதவிகள் ஏற்கனவே தீர்ந்து போய்விட்டன. எனவே மேலதிக உதவிகளை வழங்குவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ரஸ்யா

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சமகால உலகியலில் இருந்து பொருளியலை கற்றல்

பொருளியல் (Economics) என்பது வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு எண்ணிறைந்த தேவைகள் (Needs), கேள்விகளில் (Demand) சிலவற்றை முன்னுரிமைப்படுத்தி ஈடுசெய்வதாகும்.

இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்பட்ட தேவைகளை நிறைவு செய்ய வரையறுக்கப்பட்ட வளங்களை உபயோகிக்கும் பொழுது அதற்காக தியாகம் செய்யப்படும் ஏனைய தேவைகளை சந்தர்ப்ப பெறு மதிகள் (Opportunity cost) என்ற வரையறைக்குள் அடக்கலாம்.

நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் யாவை, அவற்றுக்காக தியாகம் செய்யப்படவேண்டிய தேவைகள் யாவை என்பதை சரியான முறையில் பகுப்பாய்வு செய்யாமல் தேவைகள் தவறாக முன்னுரிமைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படும் பொழுது அல்லது இருக்கின்ற வளங்களை மீறி மிகையாக தேவைகளை நிறைவேற்ற முற்படுகின்ற பொழுது பொருளாதார நெருக்கடி நிலை உருவாகின்றது. இது வீட்டிற்கும் நாட்டிற்கும் பொதுவான விதியாகும்.

இதற்கு முக்கியகாரணம் முறையாக தேவைகளினதும், வழங்கப்படும் சேவைகளினதும் பெறுமானங்கள் (Costing) கணிக்கப்படாமையாகும்.

ஐக்கிய இராச்சியத்தின் தேசிய சுகாதார சேவைக்கட்டமைப்பின் (National Health Services) ஒரு பாகமாக நான் கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் அவர்கள் எந்த ஒரு சேவைகளை ஆரம்பிக்கும் பொழுதும், மற்றும் தேவைகளை நிறைவு செய்யும் முன்னுரிமையைத் தீர்மானிக்கும் பொழுதும் பெறுமானங்களை கணிப்பதை கண்டுள்ளேன்.

பல சந்தர்ப்பங்களில் நானும் அதில் பங்கு கொண்டுள்ளேன். அவர்கள் அடிக்கடி கூறும் ஒரு விடயம் தான் " Work is Time; Time is Money".

எந்த வேலையைச் செய்வதற்கும் நேர அளவு ஒன்று உண்டு. அந்த நேரஅளவுகளுக்கேற்ப செலவுகளும் அதிகரிக்கும் என்பதே அதன் அர்த்தமாகும்.

அவர்கள் தாதி ஒருவரால் செய்யமுடிந்த வேலைக்கு வைத்தியர்களை பயன்படுத்த மாட்டார்கள். வைத்தியர் ஒருவரால் செய்ய முடிந்த வேலைக்கு வைத்திய நிபுணர்களைப் பயன்படுத்த மாட்டார்கள். பொதுப் போக்குவரத்தில் சாரதியை மட்டும் கொண்டு பேருந்தை இயக்குவார்கள். எரிபொருள் நிலையங்களில் எரிபொருளை நிரப்ப அல்லது டயருக்கு காற்று அடிக்க பிரத்தியேகமான பணியாளர்களை வேலைக்கு வைத்திருக்க மாட்டார்கள். இதன் மூலம் அவர்கள் செலவுகளைக் குறைத்து மீதப்படுத்தப்படும் வளங்களைக் கொண்டு தியாகம் செய்யப்படவேண்டிய தேவைகளை நிறைவேற்றுவார்கள்.

இலங்கையில் பெறுமானங்களை கணித்தல் (Costing) தொடர்பில் பலரும் ஆர்வம் கொள்வதில்லை. பதிலாக கணக்கு பார்த்தல் (Accounting) முறைமை மூலம் வளப்பயன்பாட்டின் வினைத்திறனைத் துணிய முயல்வார்கள். ஆனால் கணக்கு பார்த்தல் முறையில் பொருளியலின் நோக்கங்களை நிறைவு செய்ய முடியாது.

பலரும் பெறுமானங்களை கணித்தலை (Costing) விரும்பாமைக்கு இரு பிரதான காரணங்கள் உள்ளன. முதலாவது கணிப்பிற்கமைய தேவைகளின் முன்னுரிமைகளை மாற்றியமைக்க அவர்கள் விரும்புவதில்லை. இரண்டவது கணிப்பின் மூலம் விரயங்கள் கண்டறியப்படுவதனையும் செயற்கையான கேள்விகள் வெளிப்படுத்தப்படுவதனையும் அவர்கள் விரும்புவதில்லை.

ஆனால் பெறுமானங்களை கணித்தலை செய்யாமல் நாடோ அல்லது வீடோ பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதானதேயாகும்.

*Costing, not the accounting is the solution for coming out from the economic crisis.*

குறிப்பு: நான் ஒரு பொருளியல் நிபுணரல்ல; மாறாக சமகால உலகியலில் இருந்து பொருளியலை கற்க முயலும் ஒரு சாதாரண பிரஜை யாவேன்

**நன்றி: வினோதன் தர்மராஜன்**

இலக்கு

## ஈழத்தமிழர் இறைமையும் பொதுவான இணக்கமும்

சிறிலங்கா அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை 08.02.2024 இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவால் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்டது. திருகோணமலை இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக வலயமாகச் செயற்படத் தொடங்கி விட்டதென்பதையும் தாய்லாந்து சிங்கப்பூர் இந்தோனேசியா, சீனாவுடன் சுதந்திர வர்த்தக வலயங்கள் ஏற்படுத்தப்படுமென்பதையும் அவரது உரையில் ரணில் அறிவித்தார். மேலும் மேல் மாகாணத்துள் பெருமளவிலான பொருளாதார முயற்சிகள் உள்ள நிலையை மாற்ற யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் பொருளாதார மையங்கள் விரைவு படுத்தப்படும் எனவும் அறிவித்தார். இவை தமிழர் தாயக நிலம் கடல் வானம் என்பன தமிழரின் கருத்துக்கேள்படாத நிலையில் அனைத்துலக பாகங்கள் பொருத்தும் இடைநிலைச் சந்தையாகவும், இந்து சமுத்திரத்தின் சேவைகள் நிலையமாகவும் பொருளாதார மையமாகவும், மீள் உற்பத்தி செய்யும் வலுச்சத்திகள் மையமாகவும், தனியார் பல்கலைக்கழக மையமாகவும் மாற்றப்படப்போகிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன. தமிழர் தாயக வளத்தையும் தமிழர்களின் மனிதவலுவையும் சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட தான் நினைத்த மாதிரி மூலதன வரவுக்காக பயன்படுத்துவேன் என்ற ரணிலின் செய்தி இதன்வழி தெளிவாகியுள்ளது. தமிழர் தாயக நிலங்களையும் கடலையும் வானையும் உலக வல்லாண்மைகளுக்கும் பிராந்திய மேலாண்மைகளுக்கும் விற்பதே அவரின் பொருளாதார நெருக்கடிக்கான உத்திகளில் முக்கியமானதாகத் தெரிகிறது. இது ஈழத்தமிழர்களுக்கான எல்லா நெருக்கடிகளுக்குமான தொடக்கமாகும். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வெளிநாட்டுக் கடன் சீரமைப்பு என்பன 91 பில்லியன் டொலர் கடனை கடன் கொடுத்தவர்கள் ஆண்டுக்கு 3 பில்லியன் டொலர்கள் படி காலத்தை நீட்டிக் கட்ட உதவினாலும் கூட தனியார் கடனே அதிகமாக இருப்பதால் அவர்கள் நீண்ட காலத்துக்கு குறைத்துக் கட்ட அனுமதியார்கள். இதனால் அனைத்துலக நிதியம் மற்றும் உலக வங்கி இலங்கை மக்கள் மேல் திணிக்கும் கடுமையான திட்டங்களாலும், அரசின் இவ்வருட வருமானம் 4127 பில்லியனாகவும் செலவீனம் 6978 பில்லியனாகவும் இதில் வட்டியாக மட்டும் 2651 பில்லியன் அமைவதாலும், இலங்கையில் மக்கள் வாழ இயலாத பொருளாதார நெருக்கடியே தொடரும். இதனால் உள்நாட்டுக் கிளர்ச்சி எழுவதைச் சமாளிக்கப் புத்தர், கன்பிசியஸ், மகாகவி பாரதியார் வழி அவர் ரணில் அறிவுரைகளையும் பகர்ந்துள்ளார்.

"நெருக்கடியைச் சபித்துக் கொண்டிருப்பதன் மூலம் நெருக்கடியிலிருந்து விடுபட முடியாது. நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதன் மூலம் நெருக்கடியில் இருந்து மீள முடியாது. நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பதன் மூலம் தான் உலகமும் நாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகளைத் தீர்க்க முடிந்துள்ளது" எனத் தனது உரையைத் தொடங்கினார். அப்படியானால் இந்த கூற்றின் அடிப்படையில் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு அவர்களுடைய பிரிக்கப்பட இயலாத தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பதன் மூலம் தீர்க்க முயல்வதைச் சிறிலங்கா அரசாங்கம் பிரிவினை என்றும் பயங்கரவாதம் என்றும் வரைவு செய்கின்ற தவறை சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கா இனியாவது திருத்திக் கொள்வாரா? ரணில் விக்கிரமசிங்கா மட்டுமல்ல ஈழத்தமிழர் அரசியல்வாதிகளும் ஈழத்தமிழர் அமைப்புக்களும் நெருக்கடியைச் சபிப்பதையும் நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதையும் நிறுத்தி நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பது குறித்து சிந்தித்துச் செயலாற்றுவார்களா? என்ற கேள்வியும் எழுகிறது.

மேலும் சிறிலங்கா ஜனாதிபதி "நெருக்கடி முகாமைத்துவத்தில் அடிப்படை என்னவாக இருக்க வேண்டும் என்பதற்குப் புத்தரின் "தங்களுக்குத் தாங்களே ஒளியாக வேண்டும்" என்ற போதனையின் வழி நெருக்கடிகளைச் சமாளிக்கும் செயல்முறையைத் தன்னிடமிருந்தே தொடங்க வேண்டும். உலகில் எங்கும் ஏனையவர்களைக் குறை கூறி நெருக்கடியைச் சமாளித்தது கிடையாது. எம்மை எமக்கான ஒளியாக மாற்றா விட்டால் நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் சீர்செய்யாது விட்டால், நமக்கு நன்மை நடக்காது, நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. நெருக்கடிக்குத் தீர்வும் இல்லை. முறைமையில் மாற்றம் இருக்காவிட்டால் 'சிஸ்டம் சேஞ்' பற்றித் தொண்டை கிழியக் கத்தினாலும் நாம் அடிப்படையில் இருந்து மனம் மாறாவிட்டால் முறைமையை எம்மால் மாற்ற முடியாது" என விளக்குகிறார் அதே வேளை இந்தக் கொள்கை விளக்க உரைக்கு நான்கு நாட்கள் முன்னதாகத் தான் சிறிலங்காவின் தங்கள் மேலான இனஅழிப்புச் "சிஸ்டம் சேஞ்சுக்காக" ஈழத்தமிழர் தாயகமெங்கும் 04.02. 2024இல் சிறிலங்காவின் 76 வது சுதந்திர தினத்தை கரிநாளாக சனநாயக வழிகளில் அமைதிப் போராட்டங்கள் பேரணிகள் மூலம் வெளிப்படுத்தினர். அந்நேரம் கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பில் ஈழத்தமிழ் மாணவர்கள் இளம் பெண்கள் இளைய சமுகத்தினர் முதியவர்கள் அனைவரையும் இதே ரணில் விக்கிரமசிங்காவின் பொலிசார் அடிமைகளை நடாத்துவது போல் பெண்களை ஆண் பொலிசார் காரணமின்றி உடலில் தொட்டுத்தள்ளும் பண்பாட்டு மரபு மீறல் உட்பட தாக்கி அடித்தல் தண்ணீர்தாரை பாய்ச்சுதல் தெருக்களில் தரையில் நாய்களைப் போல் கொர கொர இழுவையாக இழுத்துச் செல்லல் கைதுசெய்தல் பதிவாகின. இது ரணில் விக்கிரமசிங்கா 'சிஸ்டம் சேஞ்' பற்றிப் பேசினாலும் அவருக்குக் கனவிலும் அதனை நடைமுறைப்படுத்தும் எண்ணம் அறவே இல்லையென்பதை உலகுக்குத் தெளிவாக்குகிறது. மேலும் இலண்டனில் ஈழத்தமிழர்கள் நடாத்திய 04.02. 2024 கரிநாள் பேரணிக்கு ரணிலின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உத்தியோக பூர்வமான கண்டனத்தைக் கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதுவருக்குத் தெரிவித்துள்ளமை ரணிலின் அரசாங்கம் ஈழத்தில் மட்டும் அல்ல உலகில் உள்ள ஈழத்தமிழர்களையும் அவர்களுடைய தாயக மக்களின் 'சிஸ்டம் சேஞ்' க்கு சனநாயக வழிகளில் குரலெழுப்ப அனுமதிக்காது என்பதை கொள்கை விளக்கம் அளிக்கப்பட்டு நான்கு நாட்களுக்குள் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது.

மேலும் மகிந்தாவின் சிந்தனையான "ஒரு சிறிலங்காவினர்' என்ற பல்லின பன்மொழி பல்கலாச்சாரத்தை மறுத்தல் ரணிலின் சமுக கொள்கை. கோட்டபாயவின் தம்மை ஆட்சிக்குக் கொண்டுவந்த சிங்கள பௌத்த மக்களுக்கே தங்கள் ஆட்சி பணி என்ற சிந்தனை" 'சிறிலங்காவினரின் தேவைகளுக்கு' என்ற ரணிலின் அரசியல் கொள்கை. இந்தச் சிறிலங்காவினரின் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு அனைவரும் கூட்டொருமித்த கருத்துடன் 'பொதுவான இணக்கத்துடன்' பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வைத்தல் என்பது ரணிலின் பொருளாதாரக் கொள்கை. இந்த ஒரு சிறிலங்காவினர் - சிறிலங்காவின் தேவைகளுக்காக- பொதுவான இணக்கத்துடன் கூடிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உழைத்தல் என்பதே ரணிலின் நிர்வாகம். இவை ஈழத்தமிழரையும் மலையகத் தமிழரையும் முஸ்லீம் மக்களையும் நாட்டுரிமையற்ற சிறிலங்காவின் சமுகத்தினர் (Community) என்ற அடிமைநிலை உருவாக்கம். இதனை நிறைவேற்றிய பின்னர் 2026 இல் அடிமையாக்கப்பட்ட சமுகத்தினர்க்கான சிங்கள எசமான்களின் கருணைப் பார்வைக்கான உளவியலை உருவாக்கலே ரணிலின் நல்லிணக்கம். ரணிலின் சமுக நீதியென்பது சிங்கள எசமான்களுடன் சமரசமாக மற்றவர்களை பழக்குதல். இந்நிலையில் இதனைத் தடுக்க ஈழத்தமிழர்களையும் மலையக மக்களையும் முஸ்லீம்களையும் கூட்டொருங்குச் செயற்பாட்டுக்குள் கொண்டு வரவல்ல பொது அமைப்பு உடன் உருவாக்கப்பட வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணம்.

**ஆசிரியர்**

# மாலைதீவில் சீன ஆய்வு கப்பல்; இலங்கையில் இந்திய நீர்மூழ்கி




அகிலன்

இலங்கைக்கு வரவிருந்த சீனாவின் ஆய்வுக்கு கப்பல் இப்போது மாலை தீவுக்கு சென்றிருக்கின்றது. இந்தியாவின் அழுத்தத்தையடுத்து வெளி நாட்டு ஆய்வு கப்பல்கள் எதற்கும் ஒரு வருட காலத்திற்கு அனுமதி வழங்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் அறிவித்துள்ளதையடுத்தே தன்னுடைய ஆய்வு கப்பலை மாலைதீவை நோக்கி சீனா நகர்த்தியது. இலங்கை கரையிலிருந்து எதனை செய்வதற்கு சீனா திட்டமிட்டிருந்ததோ அதனை இப்போது மாலைதீவில் இருந்து செய்கின்றது.

சீனாவின் இந்த நகர்வு நிச்சயமாக இந்தியாவுக்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கலாம். மாலைதீவு இப்போது சீனாவின் செல்வாக்கு உட்பட்ட ஒரு நாடாக இருப்பதால் இந்தியாவால் மேற்கொண்டு எதனையும் செய்ய முடியாத நிலைமை. இதனால் தன்னிடமுள்ள சக்தி வாய்ந்த நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை இலங்கைக்கு நகர்த்தியிருக்கிறது இந்தியா. இதன் மூலமாக சில செய்திகளை இந்தியா தெரியப்படுத்தியிருக்கின்றது.

இந்தியப் பெருங்கடலில் சமீபத்தில் இடம்பெற்ற இந்த இரண்டு கடல்சார் நகர்வுகளும் புவிசார் அரசியல் பார்வையாளர்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளன. இவை பிராந்திய போட்டிகள் மற்றும் மூலோபாய நோக்கங்கள் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன. இலங்கையை மையமாகக் கொண்ட இந்திய - சீன அதிகாரப் போட்டி எந்தளவுக்கு தீவிரமாக சென்றுகொண்டிருக்கிறது என்பதை இந்த நகர்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.



சீனாவின் சியாங் யாங் ஹாங் 3 என்ற ஆராய்ச்சிக் கப்பல் கடந்த வாரம் மாலைதீவில் தரித்து நிறுத்தப்பட்டது. அதே நேரத்தில் இந்தியா ஒரு நீர்மூழ்கிக் கப்பலை இலங்கைக்கு அருகில் நகர்த்தியது. இது ஒரு வெறும் தற்செயல் நிகழ்வா, அல்லது இந்தப் பகுதியில் உருவாகியிருக்கும் வல்லரசு போட்டியைக் குறிக்கிறதா என்ற கேள்விக்கு பதிலை தேடுவது கடினமான ஒன்றல்ல.

சீனாவின் ஆய்வு கப்பல் முதலில் இலங்கைக்குதான் வருவதாக இருந்தது. கடந்த வருட பிற்பகுதியிலேயே இதற்கான அனுமதியை சீன கோரியிருந்தது. இந்தியாவின் தொடர் அழுத்தங்கள் காரணமாக ஒரு வருட காலத்திற்கு எந்த ஒரு ஆய்வு கப்பலையும் அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் கடந்த வருட இறுதி பகுதியில் எடுத்தது. கடந்த காலங்களிலும் சீன ஆய்வு கப்பல்கள் இலங்கை வரும் போது இந்தியா தன்னுடைய கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தே வந்திருக்கின்றது.

ஆனால், இது தேர்தல் ஆண்டாக இருப்பதால் இந்தியாவுடன் முரண்பட்டுக் கொள்வது தனக்கு ஆபத்தானதாக முடியலாம் என்பதால் ஒருவித சமரசப் போக்கில் செல்வதற்கு ரணில் முற்பட்டார். அதனால் தான் சீனா என்று பெயரைக் குறிப்பிடாமல், "எந்த ஒரு ஆய்வு கப்பலையும் ஒரு வருடத்திற்கு அனுமதிப்பதில்லை" என்ற தன்னுடைய நிலைப்பாட்டை ஜனாதிபதி அறிவித்தார்.

இந்தப் பின்னணியில் தான் தன்னுடைய செல்வாக்கு உட்பட்ட நாடாகவுள்ள மாலைதீவுக்கு தமது ஆய்வுக் கப்பலை அனுப்புவதற்கு சீனா தீர்மானித்தது.

*Xiang Yang Hong 3* என்ற இந்த கப்பல் அதிகாரப்பூர்வமாக கடல் உயிரியல் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அதன் இரட்டைப் பயன்பாடு. அதாவது சிவிலியன் - இராணுவ மற்றும் புலனாய்வு பயன்பாடு குறித்த கவலைகளை எழுப்பும் இந்தியா, அதற்கு எதிரான நகர்வு ஒன்றைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. தன்னுடைய நீர் மூழ்கிகளில் ஒன்றை இலங்கையை நோக்கி இந்தியா நகர்த்தியது இதனால் தான்.

சீனாவுடன் வளர்ந்து வரும் உறவுகளைக் கொண்ட மூலோபாய ரீதியாக அமைந்துள்ள தீவுக்கூட்ட நாடான மாலைதீவுக்கு ஆய்வுக் கப்பலின் வருகை பெய்ஜிங்கின் நோக்கங்கள் பற்றிய ஊகங்களைத் தூண்டியுள்ளது.

சீனாவின் ஆய்வு கப்பல் மாலைதீவிலிருந்து என்ன செய்யப் போகின்றது என்று கேள்வி பலருக்கு எழலாம். கடற்படை குறித்த ஆய்வாளர்களின் கருத்துப்படி பின்வரும் வேலைகளை அந்த ஆய்வு கப்பல் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது:

கடல் நகர்வு குறித்த நோக்கங்களுக்காக நீருக்கடியில் தரவைச் சேகரிப்பது, பிராந்தியத்தின் கடல்சார் சூழலைப் பற்றிய அதன் புரிதலை மேம்படுத்துதல் அல்லது இந்திய கடற்படை நடவடிக்கைகளைக் கண்காணிப்பது போன்றவற்றை சீனா நோக்கமாகக் கொண்டிருக்கலாம். இந்த நடவடிக்கை இந்தியப் பெருங்கடலில் அதன் (சீனாவின்) இருப்பை உறுதிப்படுத்துவதற்கும் மாலைதீவுடனான அதன் மூலோபாய கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும் சீனா பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்தியப் பெருங்கடலைத் தனது கொல்லைப்புறமாக புதுடில்லி கருதுகிறது. அங்கு சீனாவின் இருப்பை சந்தேகத்துடன் பார்க்கிறது. அதிகரித்த சீன நடவடிக்கையானது பிராந்திய அதிகார சமநிலையை சீர்குலைக்கும். மற்றும் மாலைதீவு மற்றும் அதற்கு அப்பால் உள்ள அதன் மூலோபாய நலன்களை அச்சுறுத்தும் என்று இந்தியா கவலைப்படுகிறது. அஞ்சுகிறது.

பிராந்திய சமன்பாட்டில் மற்றொரு முக்கியமான பங்காளியான இலங்கைக்கு அருகில் நீர்மூழ்கிக் கப்பலை இந்தியா நிறுத்தியிருப்பது அதன் சொந்த முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. சீனாவின் ஆய்வுக் கப்பல் மாலைதீவில் நிலைகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், தன்னுடைய நீர்மூழ்கிக் கப்பலை இலங்கைக்கு இந்தியா நகர்த்தி இருப்பது தற்செயலான ஒரு நிகழ்வாக கொள்ள முடியாது.

இந்த செயலை இவ்வாறு விளக்கலாம் என்று இராணுவத் துறை ஆய்வாளர் ஒருவரிடம் கேட்டபோது அவர் முக்கியமான சில கருத்துக்களை முன்வைத்தார்.

"இந்தியா விழிப்புடன் இருப்பதாகவும், பிராந்தியத்தில் அதன் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்க தயாராக இருப்பதாகவும் சீனாவுக்கு இது ஒரு செய்தியை அனுப்புகிறது. இலங்கையின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.



நீர்மூழ்கிக் கப்பலை அனுப்புவது இந்தியாவின் வளர்ந்து வரும் கடற்படைத் திறன்களையும், இந்தியப் பெருங்கடலில் ஆற்றலை வெளிப்படுத்தும் திறனையும் காட்டியிருக்கின்றது. இது எதிரிகளுக்கு ஒரு தடையாக இருக்கும் அதே வேளையில், பிராந்திய பாதுகாப்பு வழங்குநராக இந்தியாவின் பிம்பத்தை உயர்த்தவும் முடியும்.

இந்த நகர்வுகள் இந்தியப் பெருங்கடலில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்கனவே புகைந்து வரும் போட்டிக்கு எரி பொருளை ஊற்றுவது போல அமைந்துள்ளது. எந்தவொரு நடவடிக்கையும் உடனடி மோதலைக் குறிக்கவில்லை என்றாலும், அவை அடிப்படை பதட்டங்களையும் பிராந்தியத்தில் செல்வாக்கிற்கான போட்டியையும் வெளிப்படுத்துகிறது.

பிராந்திய போட்டி இவ்வாறு தீவிரமடைவது பல்வேறு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் மட்டும் ஒரு ஆய்வாளர் சுட்டிக் காட்டுகின்றார்.

ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே பதட்டங்களை அதிகரிக்கக்கூடும், இது பிராந்தியத்தில் மேலும் இராணுவமயமாக்கல் மற்றும் மூலோபாய அவநம்பிக்கைக்கு வழிவகுக்கும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஜே.வி.பி.யை அழைத்த டில்லி

# இராஜதந்திரமா? சமரசமா?



மூத்த ஊடகவியலாளர்
**தனபாலசிங்கம்** செவ்வி

**ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட நகர்வுகள் கொழும்பு அரசியலில் தீவிரமடைந்திருக்கும் நிலையில், புதுடில்லிக்கான விஜயத்தை ஜே.வி.பி.யின் உயர்மட்டக்குழு ஒன்று மேற்கொண்டுள்ளது. ஆரம்பம் முதல் இந்திய எதிர்ப்பு என்பதையே தமது ஆயுதமாகக் கொண்டிருந்த ஜே.வி.பி.யின் தலைவர்கள் இந்தியாவில் முக்கிய அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பிரத்தியேகப் பேச்சுக்களை நடத்திவருவது அரசியல் வட்டாரங்களில் வியப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் பின்னணியில் உள்ள இராஜதந்திரம் என்ன? தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும், மூத்த ஊடகவியலாளருமான வீரகத்தி தனபாலசிங்கம் இது குறித்து பேசுகின்றார்.**

**ஜே.வி.பி.யினருடைய இந்திய விஜயம் எந்தவகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்கள்?**

இந்த வாரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு முக்கியமான நகர்வாக அரசியல் மட்டத்திலும் ஊடகங்களிலும் பிராந்திய மட்டத்திலும் நோக்கப்படும் ஒரு விடயமாக ஜேவிபியின் முக்கியமான தலைவர்கள் இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அந்த நாட்டுக்கு சென்று இருக்கின்றார்கள். இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று அவர்கள் அங்கு சென்றுள்ளார்கள் என்பது முக்கியமாக நோக்கப்பட வேண்டியது.

இலங்கையில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் பொதுவாக இந்தியாவிலுள்ள இடதுசாரி கட்சிகளின் தோழமை அழைப்பை ஏற்று அங்கு செல்வது தான் வலிமையாக இருந்துள்ளது. இந்த வகையில் ஜேவிபி தன்னுடைய புதிய தலைவர்கள் கடந்த காலங்களிலும் இந்தியாவுக்கு சென்று வந்துள்ளார்கள் அது அங்கு இருக்கக்கூடிய இடதுசாரி கட்சியுடன் அவர்களுக்கு இருக்கக்கூடிய தோழமையான அழைப்பு.

ஆனால் இப்போது அனுரா குமார திசாநாயக தலைமையிலான குழுவினர் இந்திய அரசாங்கத்தினுடைய உத்தியோபூர்வமான அழைப்பை ஏற்று அங்கு சென்று இருக்கின்றார்கள். இதுதான் இப்போது முக்கியத்துவம் பெறுகின்றது. தற்போது இலங்கை ஆனது ஜனாதிபதி தேர்தலில் ஒன்றுக்கு தன்னை தயார்படுத்தி வரும் நிலைமையில் இந்த விஷயம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதும் இதன் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்துகிறது.

ராஜபக்ஷக்களின் தவறான பொருளாதார அணுகுமுறைகள் காரணமாக உருவாகிய நெருக்கடி அதனால் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி போன்றவற்றை மிகவும் சாதுரியமாக பயன்படுத்தி தங்களுடைய செல்வாக்கை உயர்த்திக் கொண்ட ஒரு கட்சியாக ஜேவிபி நோக்கப்படுகின்றது. தற்போது மேற்கொள்ளப்படும் பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் அந்த கட்சிதான் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கை பெற்றுள்ள கட்சி என்பதை வெளிப்படுத்தி வருகின்றன. ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியோ அல்லது மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவே பின்னணியில் இருப்பதாகத்தான் கருத்து கணிப்புக்கள் வாக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பொதுவாகவே ஜே வி பி யின் கூட்டங்களுக்கு மக்கள் திரள்வார்கள் ஆனால் தேர்தல் என்று வரும்போது அந்தப் பெரும் கூட்டம் வாக்குகளாக மாறியதாக இதுவரையில் வரலாறு இல்லை. ஆனால் இப்போது பழைய பாணியிலேயே நாங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது என்பதுதான் நிலைமை. இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் இப்போது செயல்படும் ஜேவிபி முக்கியமான பாத்திரம் ஒன்றை வகிக்கக்கூடிய நிலைமையில் இருப்பதாக இந்தியா கருதுகிறதா என்பதுதான் இப்போது எழும் முக்கியமான கேள்வி.

அவ்வாறு இந்தியா நோக்கவில்லை என்றால் அவர்களை இந்தியாவிற்கு அழைத்து பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டிய சூழ்நிலை தோன்றியிருக்காது. ஜேவிபியுடன் இந்திய தரப்பில் நடத்திய பேச்சு வார்த்தைகளை பார்க்கும் போது அரசாங்கத்திற்கு வரப் போகின்ற ஒரு தரப்புடன் எவ்வாறு பேசுவார்களோ அந்த வகையில் தான் அவருடைய பேச்சுவார்த்தையால் இடம் பெற்று இருக்கின்றது. பிராந்திய பாதுகாப்பு, பொருளாதார நிலவரங்கள் இலங்கையின் எதிர்காலம் போன்ற விடயங்களை குறித்து இந்திய வெளிவிவகாரஅமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் பாதுகாப்பு செயலாளர், வெளிவிவகார செயலாளர் ஆகியோர் ஜேவிபி தலைவர்களுடன் பேசி இருக்கின்றார்கள்.

அதனைவிட *Observer foundation* என்ற சிந்தனைக் குழாமிலிருந்த பிரமுகர்களும் அவர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தி இருக்கின்றார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில் இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல் சக்திகள், மக்கள், பல்வேறு சிவில் சமூக அமைப்புகள், அரசியல் விவகாரங்களில் ஈடுபாடு கொண்டு தரப்புகள் எல்லாம் தேசிய மக்கள் சக்தி தலைவர்களுக்கு இந்தியா கொடுக்கும் முக்கியத்துவத்தை ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது.

ஜேவிபியை பொறுத்தவரையில் ஒரு இந்திய எதிர்ப்பு அமைப்பாகவே அது பார்க்கப்பட்ட வந்தது. இந்த கட்சியை அழைத்து இந்தியா பேச்சு வார்த்தைகளை நடத்துகிறது என்பது ஜேபிபி யின் கடந்த காலத்தையிட்டு இந்தியா பொருட்படுத்த தயாராகவில்லை என்பதையே உணர்த்துகிறது. அரசியல் பொருளாதார மற்றும் பல்வேறு விடயங்களில் ஜேவிபியின் போக்கில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானித்ததன் பின்புலத்தில்தான் அவரால் ஜேவிபியை புதுடில்லிக்கு அழைத்திருக்க வேண்டும்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு ஜேவிபி தலைவர்கள் நாடு திரும்பிய பின்னர் சொல்லக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் தான் அடுத்தவற்றை நோக்கக் கூடியதாக இருக்கும்.

இதனை பொறுத்தவரையில் இரண்டு விடயங்களை தான் நோக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஜேவிபி கடந்த கால இந்தியா எதிர்ப்பு நிலைப்பாடு அவர்களுக்கு இப்போது ஒரு பிரச்சினையாக இல்லை. இரண்டாவது இலங்கையின் எதிர்கால அரசியலை நிர்மாணிப்பதில் ஒரு தீர்க்கமான சக்தியாக ஜேவிபி இருக்கும் என்று இந்தியா கருதுகின்றார்கள் என்றும் சொல்ல முடியும்.

**ஜேவிபி அமைப்பை பொறுத்தவரையில் 1971 ஆம் ஆண்டு முதலாவது புரட்சியை மேற்கொண்ட போதும் பின்னர் இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில் இரண்டாவது கிளர்ச்சியை அவர்கள் முன்னெடுத்த போதும் இந்திய எதிர்ப்பு வாதத்தை முன் வைத்திருந்தார்கள். ஜேவிபியைப் பொறுத்தவரை தங்களுடைய கட்சியை வளர்த்துக் கொள்வதற்கு இந்திய எதிர்ப்பு வாதம் என்பது அவர்களுக்கு அந்த காலத்தில் தேவையாக இருந்ததற்கு என்ன காரணம்?**

ஜேவிபி என்பது 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி. அதனுடைய ஆரம்பத்தை நாம் பார்த்தால், சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வாலிபர் முன்னணியின் முக்கிய உறுப்பினராக இருந்தவர்தான் றோஹண விஜயவீர. அந்தக் கட்சியில் இருந்து அவர் பின்னர் வெளியேறினார். வெளியேறித்தான் ஜே.வி.பி.யை ஆரம்பித்தார். தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கூட சிங்கள தேசியவாதத்தை வெளிப்படுத்திய ஒருவராகத்தான் அவர்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கரிநாள் போராட்டத்தை நியாயமாக்கிய சிறீலங்கா

சிறீலங்கா தேசத்தின் சுதந்திர தினம், தமிழர்களுக்கு கரிநாள்தான் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் ஆட்சி இறைமையை வஞ்சகமான முறையிலும், இத்தீவில் எப்போதும் இனங்களுக்கிடையில் வன்முறைகளும், முரண்களும், படுகொலைகளும் நிலைத்திருக்கக்கூடிய வகையிலும் காலனியாதிக்கவாதிகள் சிங்களவர்களிடம் மாத்திரம் கையளித்துவிட்டுப் போயினர். சிங்களவர்களுக்கு மாத்திரம் நன்நாளாக அமைந்திருக்கும், இந்நாளை சிங்களவர்கள் மாத்திரமே தம் சுதந்திர நாளாகக் கொண்டாடுகின்றனர். தமிழர்கள் இத்தினத்தைக் கடந்த 76 ஆண்டுகளாகக் கரிநாளாகவே கடைபிடித்துவருகின்றனர். சிறீலங்காவின் ஒவ்வொரு சுதந்திர தினத்திலும், தமிழர்கள் கரிநாளாக அதனைக் கடைபிடிப்பதற்கான காரணத்தின் நியாயத்தை சிங்கள அரசு உலகிற்கு வெளிப்படுத்திவிடுகின்றது. அதற்கு எடுத்துக்காட்டானதொரு சம்பவம்தான் கடந்த வாரம் இடம்பெற்ற சிறீலங்காவின் 76 ஆவது சுதந்திரநாளில் கிளிநொச்சியில் நடந்தேறியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கங்கள், சில சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் இணைந்து இம்முறை கிளிநொச்சியில் கரிநாள் போராட்டத்தினை நடத்தத் திட்டமிட்டிருந்தன. அதன்படி, கரிநாள் போராட்டம் இரணைமடுச் சந்தியிலிருந்து கிளிநொச்சி டிப்போ சந்தி வரைக்கும் பேரணியாக இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.



கரிநாள் தினத்தின் காலை, கிளிநொச்சி நகரிலிருந்து இரணைமடுச் சந்திவரைக்கும் புலனாய்வாளர்கள், பொலிஸார் என குவிக்கப்பட்டனர். காலை 6 மணிக்கே டிப்போ சந்தியில் பொலிஸ் தடுப்பு வேலியும், நீர்த்தாரை வாகனமும் பல நூற்றுக்கணக்கான பொலிஸாரும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். கிளிநொச்சி நகரத்திற்குள் போராட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்கவே இந்தத் தடுப் பரண்கள் அமைக்கப்படுகின்றன எனப் போராட்டக்காரர்கள் கருதி, அதைப்பற்றிக் கவனத்திலெடுக்காமல் விட்டனர். போராட்டம் டிப்போ சந்தியுடன் நிறைவடைவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமையால், இந்தத் தடுப்பரண்களால் தமக்கு ஏதும் பிரச்சினை வராது எனவும் கருதினர்.

காலை 10 மணிக்கு இரணைமடுச் சந்தியிலிருந்து, சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தை எதிர்க்கும் பதாகைகளைக் கையிலேந்தியபடி பேரணியாக நடப்பதற்குக் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தயாராய் நின்றனர். ஆனால் அந்நேரத்திற்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வந்துசேரவில்லை. தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதந்த பல்கலைக்கழக மாணவர்களின் பேருந்துகளை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கருகில் வழிமறித்த பொலிஸார் மாணவர்களைச் சோதனையிட்டு, வலிந்து தாமதத்தை ஏற்படுத்தினர்.

அந்தச் சோதனைகளிலிருந்து விடுபட்டு, பல்கலைக்கழக மாணவர்கள் இரணைமடுச்சந்திப் பகுதியை வந்தடைய 11 மணி ஆகியது. சரியாகப் 11.05 இற்குக் கரிநாள் போராட்டங்கள் இரணைமடுச் சந்தியிலிருந்து புறப்பட்டது. இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி, இனப் படுகொலைக்கான சர்வதேச விசாரணை, தமிழர்களின் சுயநிர்ணய உரிமை எனப் பல விடயங்களை பதாகைகளாகவும், கோசங்களாகவும் வெளிப்படுத்திய போராட்டக்காரர்கள் ஏ9 சாலையின் ஒரு பக்கமாக நடக்கத் தொடங்கினர். பொதுப் போக்குவரத்திற்கோ, வீதியில் சென்று வந்த மக்களுக்கோ எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவகையில் போராட்டத்தினைப் பல்கலைக்கழக மாணவர்கள் வழிநடத்திக்கொண்டிருந்தனர். போராட்டப் பேரணியானது இரணைமடுச் சந்தியிலிருந்து ஒரு கிலோமீற்றர் நகர்ந்திருக்கையில், பொலிஸார் தம் தடுப்பரண்களையும், நீர்த்தாரை வாகனத்தையும் ஏ9 வீதிக்கு குறுக்கே நிறுவினர். இதனால் போராட்டக்காரர்களால்



துரைராஜா ஜெயராஜா

தொடர்ந்தும் நகர முடியவில்லை. வீதியை மறித்து நின்ற பல நூற்றுக்கணக்கான பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் முன்பாகத் தம்மை தொடர்ந்து செல்ல அனுமதிக்குமாறு கோசங்களை எழுப்பினர். அவ்வேளையில், நோயாளர் காவுவண்டியொன்று, அவசர ஒலியெழுப்பியவாறு அவ்விடத்திற்கு வந்தது. அதற்கு வழிவிடுவதற்கு, வீதியைத் திறந்துவிடுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதற்குப் பொலிஸார் சம்மதிக்காமல் நிற்க, மாணவர்கள் தடுப்பரணின் ஒரு பகுதியை அகற்றினர். சமநேரத்தில், பெண்ணொருவர், பொலிஸார் ஒருவர் மீது தாக்குதல் நடத்தினர். இத்தோடு பொலிஸார் நீர்த்தரைப் பிரயோகம் செய்தனர். கண்ணீர்ப் புகைக்குண்டுகளை சரமாரியாகப் போராட்டக்காரர்கள் மீது வீசினர்.

இதனால் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகள் அதிகம் பாதிக்கப்பட்டனர். புகை ஒவ்வாமை அவர்கள் மூச்செடுப்பதை சிரமப்படுத்தியது. அதனால் நாலா பக்கமும் சிதறியோடினர். சிதறி ஓடியவர்களை பின்னால் விரட்டிச் சென்ற பொலிஸார், போராட்டத்திற்காக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த வாகனத்தை கையகப்படுத்த முயற்சித்தனர். அது சாத்தியப்படாமல் போக, தம் கண்ணில் அகப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களையெல்லாம், வீதியில் போட்டுத் தரதரவென இழுத்துக்கொண்டுபோய் தம் வாகனத்தில் ஏற்றினார்கள். பொலிஸாரோடு, சிவில் உடையில் நின்றவர்களும் மாணவர்களைத் தாக்கினர். இழுத்துக்கொண்டு போய் வாகனங்களில் ஏற்றினர். துளி அளவிற்கு கூட மனித உரிமை மீறல்களைக் கவனத்தில் கொள்ளாத பொலிஸார், அவ்விடத்தில் மிலேச்சத்தனமாக நடந்துகொண்டனர். பல்கலைக்கழக மாணவர் ஒருவரைப் பொலிஸார் இழுத்துச்செல்லும்போது, அதனைத் தடுக்க மாணவனைப் பிடித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைப் பொலிஸார் தாக்கினர். வீதியில் விழுத்தி அழுத்தினர். அவ்விடத்தில் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதைக்கூட பொலிஸார் மதிக்கவில்லை. அங்கு இடம்பெறும் மனிதவுரிமை மீறல்கள் உடனுக்குடன் ஊடகங்களில் வெளிவருகின்றன என்பதைப் பொலிஸார் நன்கறிந்திருந்தபோதிலும், அது குறித்தெல்லாம் துளியளவும் கவனம்கொள்ளவில்லை. தங்களில் ஒருவரை தாக்கிவிட்டீர்கள், எனவே இதற்கு மேல் ஒரு அங்குலம் கூட நகர விடமாட்டோம் எனக்கூறி தடுப்பரனை சீர்ப்படுத்தி, கலகம் அடக்கும் பொலிஸ் பிரிவினரை முன்வரிசையில் நிறுத்தினர். சமநேரத்தில் போராட்டத்தில் கலந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் புலனாய்வாளர்கள் வீடியோ, புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தனர்.



கைதுசெய்த ஐந்து மாணவர்களையும், குறித்த பெண்ணையும் விடுக்கும் வரை வீதியை விட்டு நகரமாட்டோம் எனக்கூறி வீதியில் அமர்ந்தனர். ஐந்து மாணவர்களையும் மாலை விடுவிக்கிறோம், உடனடியாக இவ்விடத்தை விட்டு அகன்று விடுங்கள், இல்லாவிடின் இங்கிருக்கும் அனை வரையும் கைதுசெய்வோம் எனப் பொலிஸார் மிரட்டியும் மாணவர்கள் பின்வாங்கவில்லை. கைதுசெய்தவர்களை விடுவிக்காதவரை இவ்விடத்திலிருந்து வெளியேறமாட்டோம் எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களோடு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட சில அரசியல் பிரமுகர்கள் வீதியிலமர்ந்திருந்தனர். காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர், நீண்ட வரிசையில் நின்று போராடிக்கொண்டிருந்தனர்.

3 மணிநேரப் போராட்டத்தின் பின்னர், பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைத் தம்மோடு அழைத்துச் சென்ற கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தார். 2 மணிக்கு மாணவர்களை அழைத்துச் செல்லப்பட்டனர். 4 மணிக்கே அவர்களை மீளவும் போராட்டக்களத்திற்கு அழைத்துவரப் பட்டனர். அன்றைய நாள் முழுவதையும், அவ்விடத்தில் கழிக்கச்செய்து, போராட்டத்தை நலிவடையச் செய்வதற்காகவே பொலிஸார் இவ்வாறான நடவடிக்கையினை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# பலமான தமிழ் தேசிய சக்தி கிழக்கில் உருவாகவேண்டும்

மட்டு.நகரான்

வடகிழக்கு இணைந்த தமிழர்களின் ஆட்சி அதிகாரம்,வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டை இன்று உள்ள தமிழ் தேசியத்தினை ஆதரிக்கும் சக்திகள் மனதில் கொண்டிருக்கின்றது என்றால் கிழக்கு மாகாணத்தினை பாதுகாப்பதற்கு அந்த சக்திகள் முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தினை தாரைவார்த்து விட்டு அல்லது கிழக்கு மாகாணத்தினைகவனத்தில் கொள்ளாது தமிழ் தேசியம் என்ற ஒன்றை முன்நகர்த்த முன்னெடுக்கும் முயற்சிகள் என்பது கானல் நீர் என்பதை சர்வதேசத்திலும் ஈழத்திலும் தமிழ் தேசியத்தின்பால் செயற்படுவோர் சிந்திக்க வேண்டும்.




இன்று கிழக்கு மாகாணம் மிகவும் ஆபத்தான நெருக்கடியை சுமந்துகொண்டிருக்கின்றது. ஆனால் அந்த ஆபத்தினை உணராதவர்கள் போன்று வெறுமனே பதவியென்ற வெற்றுக் கோசத்தினை செலுத்திக்கொண்டிருப்பதுடன் அந்த பதவிக்காக புலம்பெயர் தேசத்திலும் இங்கும் முன்னெடுக்கும் செயற்பாடுகளை கொஞ்சமாவது கிழக்கினை பாதுகாப்பதிலும் செலுத்தவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

நாங்கள் தொடர்ச்சியாக கிழக்கு தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும்,கிழக்கில் தமிழர்களின் பலத்தை காட்டவேண்டும்,இருப்பை தக்க வைக்கவேண்டும் என்றெல்லாம் கோரிக்கை விடுப்பதனை சிலர் பிரதேசவாதமாக கருதக்கூடும். நாங்கள் வடகிழக்கு தாயகத்தினை தமிழர்களின் தாயகமாக நேசிக்கும் காரணத்தினால்தான் கிழக்கினை பாதுகாக்கவேண்டும் என்ற கோரிக்கையினை விடுத்துவருகின்றோம்.



இன்று கிழக்கில் பல்வேறு வழிகளிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது சத்தமில்லாமல் கிழக்கில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கிவருகின்றது. கிழக்கில் தமிழர்களுக்குள் மோதல்கள் நடைபெற்றுவரும் நிலையில் சத்தமில்லாமல் கிழக்கின் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இன்று கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கும் வகையிலான விடயங்கள் பல தற்போது நடைபெற்றுவருகின்றன.

கிழக்கிலிருந்து அதிகரித்துவரும் புலம் பெயர்வு,தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமைகள்,திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புகள்,பாதுகாப்பு தரப்பினரின் அடாவடிகள் என்று கிழக்கு மாகாணம் இன்று பாரிய ஆபத்திற்குள் சிக்கியுள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தினை குறிவைத்து தொடர்ச்சியான செயற்பாடுகள் பேரினவாத சக்திகளினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அதேநேரம் கிழக்கு மாகாணத்திலிருந்து அண்மைக்கால நடைபெறும் வெளிநாடுகளுக்கு செல்லும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதன் காரணமாக கிழக்கில் தமிழர்களின் இருப்பில் பாரிய மாற்றங்கள் நிகழும் வாய்ப்புகள் இருக்கின்றன.

அண்மையில் மட்டக்களப்பில் அரசசார் பற்ற நிறுவனம் ஒன்று நடாத்திய புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பான செயலமர்வின் போது கிழக்கு மாகாணத்திலிருந்து மாதாந்தம் 2500க்கும் அதிகமானவர்கள் புலம்பெயர்ந்துசெல்வதாகவும் இவர்களில் சுமார் 2200பேர் தமிழர்களாக இருப்பதாகவும் அவர்கள் குடும்பங்களுடன் புலம்பெயர்ந்து செல்லும் நிலைமை காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலைமையினை யாரும் சாதாரணமாக கடந்து சென்றுவிடமுடியாது.




கிழக்கில் இன்று மூன்று மாவட்டங்களிலும் தமிழர்கள் தமது இருப்பினை தக்கவைப்பதற்காக போராடவேண்டிய நிலையிருக்கின்றது. இன்று மட்டக்களப்பு மட்டுமே தப்பிப்பிழைத்துவரும் நிலையில் அண்மைக்காலமாக இடம்பெறும் புலம்பெயர்நாடுகளுக்கான வெளியேற்றம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் எதிர்காலத்தில் பாரிய தாக்கத்தினை செலுத்தும். ஏற்கனவே கிழக்கில் தமிழர்களின் பிறப்பு வீதம் மிகவும் குறைந்த நிலையில் காணப்படும்வேளையில் கிழக்கிலிருந்து தமிழர்களின் வெளியேற்றும் எதிர்காலத்தில் பாரிய தாக்கத்தினை செலுத்தும்.

இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட வகையிலான ஆக்கிரமிப்புகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் தமக்கான கோரிக்கையினை முன்வைத்து போராடமுடியாத சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுனராகயிருக்கும் செந்தில் தொண்டமான் மூலமும் கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்ககப்படுகின்றன. அதற்கான செயற்பாடுகளே கடந்த கறுப்பு சுதந்திர தினத்தில் முன்னெடுக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளாகும்.

இதேபோன்று பொலநறுவை மாவட்டத்தில் உள்ள தெகியத்தன்கண்டிய நகரை மட்டக்களப்பு நருடன் இணைந்து அபிவிருத்தி செய்தல் என்ற போர்ரவையில் மட்டக்களப்பில் பாரிய இனமாற்றசெயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. 14வருட கிழக்கின் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் கிழக்கு மாகாண ஆளுனரைக்கொண்டு இந்த திட்டம் உருவாகி வருகின்றது.

இதன்மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகள் அனைத்தையும் சிங்கள மயப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



மட்டக்களப்பு மயிலத்தமடு பண்ணையாளர்கள் 148 நாட்களாகவும் தமது மேய்ச்சல் தரை காணியை மீட்டுத்தருமாறு போராடிவரும் நிலையில் அவர்களுக்கான தீர்வினை வழங்க முடியாது அபிவிருத்தி என்ற போர்வையில் அக்காணிகளிலும் சிங்கள மக்களை குடியேற்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்களின் பரம்பலை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் இது வரையில் எந்த தமிழ் தேசிய சக்திகளும் வாய்திறக்கவில்லை.

ஆனால் தமிழ் தேசியத்தின் பேரில் தமது வயிறுகளை வளர்க்கும் சில சிவில் அமைப்புகள் இந்த திட்டம் தொடர்பில் அறிந்திருக்கின்றபோதிலும் இதனைவைத்து தமது பைகளை நிரப்புவதற்கான நடவடிக் கைகளையே முன்னெடுத்துவருகின்றன.




இவ்வாறான நிலையில் அண்மையில் நடைபெற்ற ஏறாவூர்ப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில். இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தங்களால் இனவாதிகளுடன் மோதமுடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் தங்களால் நீதிமன்ற கட்டளையினை கூட நிறைவேற்றமுடியாத நிலையுள்ளதாகவும் பகிரங்கமாக தெரிவித்திருந்தார். அரசாங்கத் தின் வாலைப் பிடித்துக்கொண்டு தமது பொக்கட்டுகளை நிரப்பியவர்களுக்கு தற்போதுதான் சிங்கள இனவாதிகள் முகம் தெரிந்துள்ளது என்று காட்டமுனைவதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனினும் நீதிமன்ற கட்டளையினை சிங்களவர்களுக்கு நிறைவேற்ற முடியாத நிலையிலேயே இலங்கையின்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# இளைஞர் அபிவிருத்தி

துரைசாமி நடராஜா

மலையக சமூகம் சமகாலத்தில் பல துறைகளிலும் பல்வேறு அடைவுகளை பெற்றுக் கொண்டு முன்னோக்கிய நகர்வினை மேற்கொண்டு வருகின்றது. இது ஒரு சிறப்பம்சமாகும் என்ற நிலையில் இவற்றை மேலும் சாத்தியப்படுத்திக் கொள்வதற்கு இளைஞர்கள் சமூக அபிவிருத்தி கருதி அர்ப் பணிப்புடன் செயற்பட வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது. இதிலிருந்தும் விலகிச் செல்ல எவரும் முற்படுதல் கூடாது.

இளைஞர்கள் சமூக மாற்றத்தின் அச்சாணியாக விளங்குகின்றார்கள். உழைக்கும் படை என்ற ரீதியில் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய கதாபாத்திரங்களாகவும் அவர்களே விளங்குகின்றார்கள். இளைஞர்களால் தேசம் செழுமையுறும் அதேவேளை உலகவரலாறு களை நல்லபடியாக மாற்றியமைத்த பெருமைக் குரியவர்களாகவும் இளைஞர்களே விளங்கு கின்றனர்.



இந்நிலையில் இளைஞர்களை புறந்தள் ளும் எந்தவொரு சமூகமோ அல்லது நாடோ எதிர்பார்த்த வெற்றி இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது என்பது திண்ணமாகும். இதனை கருத்தில் கொண்டே உலக நாடுகள் இளைஞர் அபிவிருத்தி கருதி விசேட பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின் றன. இளைஞர்களை அரவணைத்து நாட்டின் அபிவிருத்திக்கு வலுசேர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகின்றது.எல்லாச் சமூகங்களிலுமே இளைஞர்கள் பலம் வாய்ந்த ஒரு சமூக, பொருளாதார குடித்தொகைப் பிரி வினராக காணப்படுகின்றனர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இளைஞர்கள் அவர்களுடைய விசேட பண்புகள், தேவைகள்,சமூக மற்றும் உளவியல் ரீதியான நடத்தை முறைகள் என்பன காரண மாகவே தனிப்பட்ட ஒரு சமூகப் பிரிவினராக கருதப்படுகின்றனர். 15 வயதுவரை பெற்றோரில் தங்கியிருக்கும் பிள்ளைகள் அடுத்த சுமார் 7 தொடக்கம் 8 ஆண்டுகளில் தொடர்ந்தும் பெற்றோருடனேயே தங்கியிருந்த போதும்கூட ஓரளவு சுதந்திரமாக வாழத் தொடங்குகின்றனர்.

இக்காலப்பகுதியில் அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முயல் வதோடு தம்மிடமிருக்கும் பல்வேறு திறமை களை வெளிக்கொணரவும் முயல்வர். அத் தோடு தீர்மானங்களை மேற்கொள்வதில் தமக்கு பங்கிருக்க வேண்டுமென அவர்கள் விரும்புவார்கள். மேலும் தனிநபர் அபிவிருத்தி, சமூகப் பங்கெடுப்பு என்பன தொடர்பாகவும் இக்காலப்பகுதி அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எனவே இளமைப் பருவத்தை மனிதனது வாழ்வில் வெறுமனே ஒரு காலப்பகுதியாக மட்டும் கருதமுடியாது. உண்மையில் அது அவர்களது குறிப்பிட்டதொரு மனோநிலையினை குறிப்பதாக கருதுவதே சரியானதாகும் என்பதோடு இளமைப் பருவமானது பெரும் மாற்றங்களை கொண்ட காலப்பகுதி என்பதே பொருத்தமானதாகும் என்பது புத்திஜீவிகளின் கருத்தாக உள்ளது.

இந்த வகையில் மலையக இளைஞர்கள் குறித்து நாம் நோக்குகின்றபோது அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வருவதனை எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.வறுமை, வேலையின்மை, இனரீதியானதும், அரசியல் ரீதியானதுமான பாரபட்சங்கள், அரசியல் பழி வாங்கல்கள், புறக்கணிப்புகள் போன்ற பல பிரச்சினைகளுக்கும் மலையக இளைஞர் கள் முகம் கொடுத்து வருகின்றனர்.மேலும் இவர்களின் திறமைகளுக்கு உரிய இடம் வழங்கப்படுகின்றதா? அவர்களுக்கானவாய்ப்புக் கள் சமூகத்தில் எந்தளவில் காணப்படுகின்றன? என்பது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது.

மலையக இளைஞர்கள் முன்னைய காலங்களைக் காட்டிலும் கல்வித் துறையில் அதீத ஈடுபாடு காட்டி வருவது ஒரு சிறப்பம்சமாகும். 2012/13 ம் ஆண்டு தகவலொன்றின்படி இலங்கை மக்களின் கல்வி மட்டம் பின்வருமாறு அமைந்துள்ளது. பாடசாலைக்கு செல்லாதோர் நகர்ப்புறத்தில் 2.2 வீதமாகவும், கிராமப்புறத்தில் 3.5 வீதமாகவும், பெருந்தோட்டத்தில் 12.2 வீதமாக வும் காணப்பட்ட அதே நிலையில் தேசியளவில் இது 3.7 வீதமாகக் காணப்பட்டது.

ஐந்தாம் தரம்வரை கல்வி கற்றோர் வீதமானது நகர்ப்புறத்தில் 19.2, கிராமப்புறத்தில் 25,பெருந்தோட்டத்தில் 42 என்றவாறு காணப் பட்ட நிலையில் தேசியளவில் இது 24.7 வீதமாகக் காணப்பட்டது. இதேவேளை 6 தொடக்கம் 10 ம் தரம் வரை பெருந்தோட்டத்தில் 38.07 வீதமானவர்களும்,க.பொ.த.சாதாரண தரம் வரை 4.09 வீதமானவர்களும், க.பொ.த. உயர்தரம் வரை 2.2 வீதமானவர்களும் சித்திபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெருந்தோட்டப்பகுதிகளில்பாடசாலைக் குச் செல்லாதோர் நகரம், கிராமத்தைக் காட்டி லும் 4 தொடக்கம் 6 மடங்கு அதிகமாகும் என்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.இந்நிலை யில் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் நகர்ப்புறங்களிலேயே திறக்கப்பட்டதால் அத்து றையைச் சார்ந்தோரே இதன் ஆகக்கூடுதலான நன்மைகளைப் பெற்றதாகவும்,தொடர்ந்து வந்த ஆண்டுகளில் கிராமப் புறங்களில் இவ்வசதிகள் ஓரளவிற்காவது விஸ்தரிக்கப்பட்டதால் கிராமிய துறையைச் சேர்ந்தோரும் கல்வியில் முன்னேற் றம் காணமுடிந்தது.

ஆனால் பெருந்தோட்டத் துறையைப் பொறுத்தவரையில் இவ்வசதிகள் செய்து கொடுக்கப்படாததன் காரணமாக ஆரம்பக்கல்வி பெறுவோரின் விகிதாசாரம் திருப்திகரமானதாக இருந்தபோதும், இரண்டாம் நிலை கல்வி யையும், இரண்டாம் நிலைக்குப்பின் கல்வியை யும் பெறுவோரின் விகிதாசாரம் மிகவும் குறைவாகவே இருந்ததாகவும் கருத்து வெளிப் பாடுகள் இருந்து வருகின்றன.எவ்வாறாயினும் சமகாலத்தில் மலையக இளைஞர்களின் கல்வித் துறை ஈடுபாடு அதிகரித்துள்ளது.

**வினைத்திறன் மேம்பாடு**

இதேவேளை வருடாந்தம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள்க.பொ.தசாதாரணதரம்மற்றும்உயர் தரத்தை முடித்துவிட்டு பாடசாலைகளில் இருந்து வெளியேறுகின்ற நிலையில் அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது. தொழிற்பயிற்சி எதுவும் இல்லாத நிலையில் காணப்படும் இவர்களின் அபிவிருத்தி கருதி மலையகத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாகவே விடுக்கப் பட்டு வருகின்றமையும் தெரிந்ததாகும்.



தொழிற்பயிற்சியின்மை மற்றும் குறை வான கல்வித் தகைமைகளைக் கொண்ட நிலையில் பல இளைஞர்கள் நகர்ப்புறங்களில் கீழ்நிலைத் தொழில்களில் ஈடுபட்டு வருகின் றனர். இதனால் வருமானக்குறைவு ஏற்படுவது ஒரு புறமிருக்க கலாசார ரீதியான சிக்கல்கள் பலவற்றுக்கும் இளைஞர்கள் முகம் கொடுத்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது .

இந்த வருடம் தேர்தல் வருடமாக உள்ளது. இவ்வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் உள்ளிட்ட முக்கிய தேர்தல்கள் இடம்பெறலாம் என்று நம்பப்படுகின்றது. இந்நிலையில் மலையக அரசியல்வாதிகள் இளைஞர்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திவிட்டு பின்னர் கைகழுவி விடுவதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. தேர்தல் காலங்களில் இளைஞர்கள் மீது காட்டும் ஆர்வத்தை பின்னர் இவ்வரசியல்வாதிகள் வெளிப்படுத்துவதில்லை.



இளைஞர்களின் நலன்களுக்கு வலுச்சேர்க் காத நிலையில் செல்லாக்காசாக இளைஞர்களை அரசியல்வாதிகள் கருதுகின்றனர். தமது வாரி சுகளை அரசியலில் உள்நுழைக்க ஆர்வம் காட்டும் இவர்கள் இளைஞர்களின் திறமை களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதாக இல்லை என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்றன. இக்குற்றச்சாட்டுகளில் நம்பகத் தன்மையும் இல்லாமலில்லை.

தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் இளைஞர்களுக்கு உரிய வாய்ப்பளிப்பதில்லை. இளைஞர்குறித்த தீர்மானங்களைமுதியோர்களே மேற்கொள்கின்றனர். இதனால் இளைஞர்களின் உண்மையான கருத்துகள் மற்றும் அபிலாஷை கள் பிரதிபலிக்காத நிலையில் அது பல்வேறு முரண்பாடான சூழ்நிலைகளுக்கும் வித்திடு வதாக உள்ளது. இளைஞர்களிடையே அதிருப்தி மேலோங்குவதற்கும் அது உந்துசக்தியாகி இருக் கின்றது.

இளைஞர் அதிருப்தி நிலை காரணமாக எமது நாடு கடந்த காலத்தில் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தது. சர்வதேசம் இலங்கையை சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதற்கும் இந்நிலைமை ஆதிக்கம் செலுத்தியது. இலங்கையின் அபி விருத்தி தடைப்பட்டதோடு இருதரப்பிலும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சிறப்பு முகாம் எனும் சித்ரவதை முகாம்!

கிருஷ்ணமூர்த்தி எனும் 74 வயது கொண்ட ஈழத் தமிழர் திருச்சி சிறப்பு முகாமில் மரணம். ராஜிவ் காந்தி கொலையில் தவறுதலாக தண்டிக்கப்பட்ட ஈழத் தமிழர் சாந்தன் உடல்நலக் குறைவின் காரணமாக மருத்துவமனையில் அனுமதி. அதே வழக்கில் தவறாக தண்டிக்கப்பட்டு நீண்ட சட்டப் போராட்டத்திற்கு பிறகு உச்சநீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்ட முருகன், ராபர்ட் பயாஸ் போன்றவர்களின் உண்ணாவிரதப் போராட்டம். இவை எதுவும் தமிழ்நாட்டு ஊடகங்களின் கண்ணுக்கு தெரியவில்லை. ஆனால், ஒரு திரைப்பட நடிகரின் கட்சி அறிவிப்பை முதன்மைப்படுத்தி வருகின்றனர் எனில் இவர்களின் நம்பகத் தன்மை எத்தகையது என சிந்தியுங்கள்.



சிறப்பு முகாம் குறித்தும், அதன் அதிகாரம் குறித்தும், அதில் நடைபெறும் அத்துமீறல் குறித்தும் தோழர் பாலன் அவர்கள் தன் முகநூல் வழியாக தொடர்ந்து பதிவு செய்து வருகிறார். அவரும் சில காலம் இந்த கொடிய சிறப்பு முகாம்களில் தளைப்பட்டவர் என்ற முறையில் அவரது கருத்துகளை முழுதாக இங்கே வழங்குவது சரியாக இருக்குமென கருகுகிறேன்.

“சிறப்புமுகாம் என்பது 3(2)E சட்டப்படி ஒரு வெளிநாட்டவரின் நடமாட்டத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தும் முகாம் ஆகும். வெளிநாட்டவர் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதேயொழிய மற்றபடி சாதாரண மக்களுக்குரிய அனைத்து உரிமைகளும் சலுகைகளும் அவர்களுக்கு உண்டு. ஆனால் நடைமுறையில் இச்சிறப்புமுகாம் என்பது சிறையை விடக் கொடிய சித்திரவதை முகாமா கவே இயக்கப்படுகிறது. அதாவது சிறையில் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்கு வழங்கும் சலுகைகள், உரிமைகள்கூட இச்சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கு வழங்கப்படுவதில்லை” என்கிறார் தோழர்.

“1990-ல் தனது பதவியைக் காப்பாற்று வதற்காக இத்தகையை சிறப்பு முகாமை உருவாக்கி அதில் அகதிகளை அடைத்தவர் அன்றைய முதல்வர் கருணாநிதி. இன்று அவரது மகன் ஸ்டாலின் ஆட்சியிலும் இந்த சிறப்பு முகாம் என்னும் சித்திரவதை முகாம் கொடுமைகள் தொடர்கின்றன” என தெரிவித்து உள்ளார் தோழர் பாலன்.

“உயர்நீதிமன்ற நீதிபதிகள் அருணாச்சலம் மற்றும் பிரதாப்சிங் ஆகியோர் வழக்கு எண் WP 15044/91 இல் வழங்கிய தீர்ப்பு;

**(1) சிறப்புமுகாமில் வைக்கப்பட்டவர்கள் விரும்பினால் தம் குடும்பத்தவர்களை வர வழைத்து தம்முடன் தங்குவதற்கு அனுமதிக் கப்பட்டுள்ளது. இவர்களின் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளும்**

**(2) சிறப்புமுகாமில் உள்ளவர்களை சிறையில் உள்ளது போன்று அடைத்து வைக்கக்கூடாது. அவர்கள் முகாம் எல்லைக்குள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும்**

**(3) பார்வையாளர்கள் அனைவரும் அனு மதிக்கப்படுவர். நேரக்கட்டுபாடு எதுவும் இல்லை. விரும்பிய நேரம் பேசுவதற்கும் பொருட்களை கொடுக்கவும் அனுமதிக்கப் படுவர்.**

**(4) நாடு திரும்பிச் செல்ல விரும்பினால் தம் சொந்த செலவிலோ அல்லது அரசு செலவிலோ அனுப்பி வைக்கப்படுவர்.**

தமிழக அரசு கொடுத்த வாக்குமூலத்தின் அடிப் படையிலே உயர்நீதிமன்ற நீதிபதிகள் இந்த



பேராசிரியர்
**ஆ. அருள் இனியன்**

தீர்ப்பை வழங்கினர்.

மேற்கண்ட உரிமைகள் யாவும் வழங் கப்பட்டு சட்டப்படியே சிறப்புமுகாம் நடத்தப் படுவதாக தமிழக அரசு நீதிமன்றத்தில் உறுதி யளித்தது.

ஆனால் நடைமுறையில் இவை எதுவுமே பின்பற்றப்படவில்லை. அதுவொரு சித்திரவதை முகமாகவே உள்ளது” என ஆதாரபூர்வமாக தெரிவிக்கிறார் தோழர் பாலன்.

இந்திய அரசு சட்டத்தின் படி இயங்குகிறது என்பது ஒரு போலிக் கருத்து. இங்கு யாருமே சட்டத்தைப் பின்பற்றுவது இல்லை என்பதே எதார்த்தம். இந்தியா அகிம்சை வழி பிறந்த நாடு என்று பெருமை பீற்றிக்கொள்வர். ஆனால், அதே அகிம்சா வழியாக போராடும் முருகன், ராபர்ட் பயாஸ், சாந்தன் போன்றவர்களின் போராட்டத்தை இருட்டடிப்பு செய்வதும், சட்டப்படி அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுப்பதும் எவ்வளவு பெரிய கொடுமை.

முருகன் தன் மனைவி நளினியுடன் லண்டனில் உள்ள தன் மகளுடன் வாழ விரும்புகிறார். அதற்காக அகிம்சா வழியாக போராடுகிறார். ஏற்கனவே தன் வாழ்வின் பெரும்பகுதியை சிறையில் கழித்த இவர்களின் குடும்பத்தை சிதைக்கும் இந்திய, திராவிட ஆட்சியாளர்களின் செயல் எவ்வளவு வன்மம் கொண்டது என்று யோசியுங்கள்.

‘தன் மகன் விரைவில் வருவான்.. தன் கையால் ஒருவேளை உணவையேனும் அவனுக்கு வழங்கிவிட்டு தான் சாவேன்..’ என்று சபதம் ஏற்றுக் காத்துக் கொண்டு இருக்கும் சாந்தன் தாயாரின் கண்ணீருக்கு இந்திய/ திராவிட ஆட்சியாளர்களின் பதில் என்ன?

ஈழத்தில் இறுதிக்கட்டப் போரில் பல லட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட பொழுது, அந்தப் போரைத் தடுத்து நிறுத்தக் கோரி, தன் உடலுக்கு தீயிட்டு கொளுத்திக் கொண்டு தன் உயிரை ஈகம் செய்த முத்துக்குமாரை, ‘கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்டான்’ என்றது அன்றைய கருணாநிதியின் அரசு. சிறப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யக் கோரி போராடியவர்களை அதே கருணாநிதி, ‘பிரியாணி கேட்டுப் போராடினார்கள்’ என்று கொச்சைப் படுத்தி உள்ளார் எனில் இவர்களா நமக்கான விடிவைப் பெற்றுத் தருவார்கள்?

பேரறிவாளன் உட்பட எழுவர் விடு தலைக்காக தமிழ்நாடு கொந்தளித்து போல, சிறப்பு முகாம்களை நீக்க கோரி, மீண்டும் ஒரு போராட்டம் வெடிக்க வேண்டும்.

**தமிழர்களே…! ஒன்று கூடுங்கள்…!**

**ஊடகர்களுக்கு … தொடர்ச்சி …**

தொழில்வாண்மையான ஊடகர்களை உருவாக் கவுள்ளோம் இந்த திட்டம் ஊடாக செய்தி ஆசிரியர்கள் பிரதேச ஊடகர்கள் என சுமார் 450 ஊடகர்களுக்கு பயிற்சி அளித்துள்ளோம் என்றார்.

இதில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழி தொடர்பாடல் துறை பீடத்தின் விரிவுரையாளர் கலாநிதி வி.ஜெ.நவீன் ராஜ், சட்டத்தரணி ஜகத் லியானாராய்ச்சி,சுயாதீன ஊடக வலையமைப்பின் தலைவர் சுதர்சன குணவர்தன உட்பட வெகுசன ஊடக அமைச்சின் அதிகாரிகள்,பிரதேச ஊடகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**கரிநாள் … தொடர்ச்சி …**

மேற்கொண்டனர். கைதுசெய்யப்பட்ட ஐந்து மாணவர்களையும், கிளிநொச்சி மாவட்ட வைத்தி யசாலைக்கு அழைத்துச் சென்று, பொலிஸார் அவர்களைத் தாக்கவில்லை என்பதை உறுதிப் படுத்தும் வகையில் மருத்துவபரிசோதனையை முடித்த பின்னரே விடுவிக்கப்பட்டனர்.

அவ்வளவு நேரமும் வீதியில் அமர்ந்து போராடிய மாணவர்கள், காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகள், அரசியல்வாதிகள், மாணவர்களின் விடுவிப்புடன், வீடு திரும்பினர்.

இந்தப் போராட்டத்தின்போது, பொலி ஸார் மீது தாக்குதல் நடத்திய பெண் பின்னர் என்னவானார் என்பது யாருக்கும் தெரியாது. அவரைப் பொலிஸார் பிடித்துப்போய் வாகனத் தில் ஏற்றியதும், வாகனம் புறப்பட்டது. பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுவிட்டார் எனச் சொன்னார்கள். அவர் யார்? ஏன் தாக்குதல் நடத்தினார்? கைதுசெய்யப்பட்டவர் எப்படி விடுவிக்கப்பட்டார் என்ற கேள்விகளுக்கெல்லாம் யாரிடமும் பதில் இருக்கவில்லை. சிலவேளை களில் அப்போராட்டத்தை குழப்புவதற்காகக் களத்தில் இறக்கிவிடப்பட்ட ஒருவராகக்கூட அந்தப் பெண் இருந்திருக்கலாம். இவ்வாறு பல சதிகளை மேற்கொண்டு, அன்றைய கரிநாள் போராட்டத்தைக்குழப்பிவிட்டோம்எனசிறீலங்கா அரசு நினைத்துக்கொண்டாலும், அது உலகிற்குத் தெளிவானதொரு செய்தியைக் கொடுத்திருக்கிறது. தமிழர்கள் சிறீலங்காவின் சுதந்திர தினத்தை ஏன் கரிநாளாகக் கடைபிடிக்கிறார்கள் என்பதற் கான நியாயத்தை 76 ஆவது முறையாகச் சொல்லியிருக்கிறது.

• • •

# ஈழத்தமிழர்களும் ஒரு மாற்றத்தையே விரும்புகின்றனர்

ஆர்த்தீகன்

பல தசாப்தங்களாக தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்துவரும் திராவிட முன்னேற்றக்கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய கட்சிகளின் மத்திய அரசு சார்பு அரசியலால் தமிழகம் இந்தியாவில் தனக்குள்ள மகத்துவத்தை இழந்து நிற்பதாக தமிழக மக்களிடம் எப்போதும் ஒரு வேதனை உண்டு.




வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்று சொல்லி தமிழகத்தின் பூர்வீக குடிகளான தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புக்கள் புறந்தள்ளப் படும் சம்பவங்களே அதிகம். தலைமுறை தலைமுறையாக குடும்ப அரசியலுக்குள் சிக்கியுள்ள தமிழகத்தை மீட்பதற்கு பலர் முயன்றனர் ஆனால் அவர்கள் காணாமல் போன சந்தர்ப்பங்களே அதிகம்.

அண்மையில் காலமான விஜயகாந்த் தனது முயற்சியில் ஒரளவு வெற்றிபெற்றிருந்தார். ஆனால் இரு பெரும் கட்சிகளும் அவரின் கட்சியை உடைத்து அவரையும் இல்லாது செய்துவிட்டன. 2009 ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களை இலங்கை அரசு இந்திய அரசுடன் இணைந்து தற்போது காசாவில் இடம்பெறும் படுகொலையை விட மோசமாக படுகொலை செய்தபோது அன்றைய தமிழக முதல்வர் மௌனமாக கடந்து சென்றது என்பது தமிழ் மக்களிடம் ஆறாத வலியை ஏற்படுத்திச் சென்றிருந்தது.




அதன் எதிர்வினையை 2011 ஆம் ஆண்டு தமிழகத்தில் இடம்பெற்ற சட்டமன்றதேர்தல் எடுத்துக்காட்டியது. தி.மு.காவுக்கு எதிர்க்கட்சி நிலையை கூட எட்டிப்பிடிக்க முடியாத அரசியல் தோல்வியை தமிழ் மக்கள் கொடுத்திருந்தனர். அன்று தான் விஜயகாந்த்திற்கு ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது. எதிர்க்கட்சி நிலைக்கு உயர்ந்த அவர் தமிழ் மக்கள் தொடர்பில் மேலும் தனது பணியை விரிவாக்கியிருந்தால் இறப்பதற்கு முன்னர் அவர் முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருக்க முடியும். ஆனால் அந்த சந்தர்ப்பம் தவறிப்போனது.

சீமானின் நாம் தமிழர் கட்சி தி.முகாவின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முயன்றிருந்தாலும், சினிமாவில் அவருக்கான ரசிகர்களின் எண்ணிக்கை குறைவு என்பதுடன், ஈழத்தமிழர்களின் விவகாரத்தையும் தமிழக மக்களின் விவகாரத்தையும் கையாண்ட பக்குவமும் தவறாகிப்போனது என்பது அவரால் ஒரு அளவுக்கு மேல் வளர முடியாது போய்விட்டது.



ஆனால் ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் தி.மு.காவுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதாவது பலவீனமான எதிர்த்தரப்பு.

மு.கா ஸ்ராலினின் வெற்றி என்பது 2011 ஆம் ஆண்டு கிடைத்த தோல்வியை மிகவும் கடினமாக உழைத்து தி.மு.கா மீண்டும் பெற்ற வெற்றி. அதற்காக ஸ்ராலின் ஊர் ஊராக துவிச்சக்கர வண்டியில் சென்ற காணொளிகளையும் நாம் பார்த்திருந்தோம்.

அதாவது தி.மு.காவின் பலம் என்பதைவிட எதிர்த்தரப்பின் பலவீனம் தான் இந்த வெற்றிக்கு காரணம் என்றால் அதுவும் சரிதான். இந்த நிலையில் தான் தனது அடுத்த நகர்வை மேற்கொண்டுள்ளது தி.மு.கா.

அதாவது சினிமா துறைக்குள் உதயநிதி ஸ்ராலினை களமிறக்கி அதன் ஊடாக அவரை முன்னணிக்கு கொண்டுவந்து, ஏற்கனவே தி.முகா விடம் உள்ள அரசியல் பலத்துடன் சினிமா ரசிகர்கள் பலத்தையும் ஒன்று சேர்ப்பதன் மூலம் தமிழகத்தின் அசைக்க முடியாத சக்தியாக வளர வதற்கான அடித்தளம் அது.

எனவேதான் உதயநிதியின் அண்மைய படங்கள் அனைத்தும் அரசியல் மற்றும் சமூக நீதி கலந்த படங்களாகவே வெளிவந்தன. அதற்கு சிறந்த உதாரணம் கடந்த வருடம் வெளிவந்த மாமன்னன் திரைப்படம்.

இந்த நிலையில் தான் ஒரு தனிப்பெரும் கட்சியாக வளரும் தி.மு.காவிற்கு எதிராக பலமான சக்தி ஒன்றின் தேவை உணரப்பட்டது. எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவுக்கு பின்னர் எதிர்த்தரப்பில் எற்பட்ட வெற்றிடம், தற்போது விஜயகாந்தின் மறைவு என்பன நடிகர் விஜய்க்கான கதவை திறந்து விட்டுள்ளது.

தனது தளபதி 68 (கோட்) என்ற படத்து டன் சினிமாவை விட்டு விலகி அரசியலில் ஈடுபடப் போவதாக தெரிவித்துள்ளது மட்டுமல்லாது. கடந்த 2 ஆம் நாள் தமிழக வெற்றி கழகம் என்ற கட்சியையும் ஆரம்பித்துள்ளார்.

ரஜனி அரசியலுக்கு வருவார் என எதிர் பார்க்கப்பட்டது ஆனால் அவரால் அதனை மேற்கொள்ள முடியவில்லை. அதனை அன்றிருந்த இருபெரும் கட்சிகளும் அனுமதிக்கவில்லை. ஆனால் அதற்கு பதிலாக கமல்ஹாசன் அரசியலில் குதித்திருந்தார். ஆனால் குறிப்பிடத்தக்க முன் நகர்வை அவரால் மேற்கொள்ள முடியவில்லை.

இந்த நிலையில் விஜய் தமிழகத்தின் அடுத்த மிகப்பெரும் சக்தியாக எழுவார் என்ற எதிர் பார்ப்பு எல்லோரிடமும் உண்டு. விஜய் திடீரென்று அரசியலில் குதிக்கவில்லை. அவரின் தந்தை எஸ்.ஏ சந்திரசேகரின் படங்கள் எல்லாம் அரசியல் விழிப்புணர்வுப்படங்களே, அவரின் அந்த விழிப்புணர்வு தான் விஜயகாந்தின் அரசியல் பிரவேசத்திற்கும் வெற்றிக்குமான அடிக்கல். அவரின் ரபிக் ராமசாமி என்ற படமும் அரசியல் பின்புலத்தை தான் கொண்டது.

அது மட்டுமல்லாது விஜய்க்கு தமிழகத்தில் உள்ள ஆதரவு என்பது இந்திய மத்திய அரசுவரை எதிரொலித்திருந்தது. 2006 ஆம் ஆண்டு அன்றைய இந்திய பிரதமர் மன்மோகன் சிங் டெல்லியில் வைத்து பொங்கல் சிறப்பு தபால் தலையை வெளியிட்டபோது அன்றைய தகவல் தொலைதொடர்பு அமைச்சர் தயாநிதிமாறன் மேடையில் இருந்தபோதும் முதல் பிரதியை நடிகர் விஜயிடம் தான் வழங்கியிருந்தார். அரசியல் சார்ந்த நிகழ்ச்சி என்றபோதும் விஜய் தான் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.



அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்த சமயம் தனது ரசிகர் மன்றத்தின் பெயரை விஜய் மக்கள் இயக்கமாக மாற்றியார். கொடியும் வெளியிடப்பட்டது. அது மட்டுமல்லாது மக்களுக்கான உதவிகள் மற்றும் சேவைகளும் முடுக்கிவிடப்பட்டன.



தி.முகாவை தோற்கடித்த 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் விஜய் மக்கள் இயக்கம் அ.தி.மு.காவை ஆதாரிப்பதாக தெரிவித்தது. அந்த தேர்தல் வெற்றிக்கு பின்னர் அ.தி.முகாவின் வெற்றிக்கு அணிலைப் போல உதவினோம் என விஜய் மக்கள் இயக்கம் கருத்து தெரிவித்திருந்தது.

2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளிவந்த பெரும்பாலான அவரின் படங்கள் அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வு கொண்ட படங்களாகவே வெளிவந்தன.

தமிழகத்தில் தற்போதுள்ள நிர்வாக சீர்கேடுகள், ஊழல் நிறைந்த அரசியல் கலாச்சாரம் என்பன மக்களை ஒரு மாற்றத்தை தேட வைத்துள்ளது. எனவே தான் விஜயின் மக்கள் இயக்கம் ஒரு அரசியல் பொருளாதார சீர்திருத் தங்களை கொண்டுவர அரசியல் அதிகாரம் உள்ள

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பிரித்தானிய மன்னரை நோக்கி







# மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தன்னாட்சிக்கான உரிமைக்குரல் என்ற கோசத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் பேரலையுடன் தமிழீழமே ஒரே தீர்வு என்பதை வலியுறுத்தி பேரெழுச்சியுடன் கடந்த ஞாயிறு அன்று *(04/02/2024)* நடைபெற்றது.



அதற்கு அடுத்த நாள் *(05.02.2024)* பிரித்தானிய பிரதமருக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும், பிரித்தானிய மன்னருக்கும் தமிழர் தரப்பினரால் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தன்னாட்சி உரிமையினை மீள வலியுறுத்திய கடிதம் வழங்கிவைக்கப்பட்டது




பிரித்தானிய பேரரசிடமிருந்து சிறிலங்காவிற்கு சுதந்திரம் கிடைத்தது. அன்று முதல் இன்றுவரை எமது தாயகமான தமிழீழ தேசம், சிங்களப் பேரினவாதத்தினால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. அன்று மறுக்கப்பட்ட நீதி, இன்று வரை மிகப்பெரிய இனஅழிப்பை தமிழினம் சந்தித்து நிற்கிறது. பிரித்தானியா உட்பட உலகின் பல நாடுகளில் தமிழர்கள் ஏதிலிகளாக வாழும் நிலையை உருவாக்கியது.

ஆகவே தமிழீழ மக்களுக்கு தன்னாட்சி ஒன்றே தீர்வு என்கின்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில், தன்னாட்சி உரிமைப் போராட்டம் பிரித்தானியாவில் நேற்று *(04.02.2024 )* ஐரோப்பிய நேரம் காலை *11.00* மணிக்கு ஆரம்பமாகி சிங்கள பேரினவாத அரசின் தூதுவராலயம் முன்பு மக்கள் கொட்டொலிகளுடன் பிரித்தானியப் பேரரசின் மன்னர் மாளிகை நோக்கி, தமிழீழமே ஒரே தீர்வு என்று வலியுறுத்தி ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றிணைந்து தமிழீழத் தன்னாட்சிக்கான உரிமைக்குரல் என்ற கோசத்துடன் பேரெழுச்சியுடன் நகர்ந்தது



அனைத்துலக ரீதியில் நடத்தப்பட்ட இப்போராட்டம் அனைத்துலகத் தொடர்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு, பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை, அனைத்துலகத் தமிழ் இளையோர் அமைப்பு, அனைத்துலக இராசதந்திரக் கட்டமைப்பு-தமிழீழம் ஆகிய தமிழ்தேசிய அமைப்புக்கள் இணைந்து நேர்த்தியான முறையில் இப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இப்போராட்டத்தில் ஐரோப்பிய ரீதியில் அணிதிரண்ட தமிழர்களின் கொட்டொலிகளால் லண்டன் மாநகரம் அதிர்ந்தது. மாபெரும் மக்களலை லண்டன் மாநகரை அதிரச்செய்ததோடு, தமிழீழ தன்னாட்சியுரிமையை மீண்டும் உலகறியச் செய்துள்ளது.

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே .பிரபாகரன் அவர்களே எங்கள் தலைவர் என்றும் தமிழீழமே எங்களின் நாடென்றும் சிங்கள அரசின் சுதந்திர நாள் தமிழீழத்தின் கரிநாள் என்றும் சிங்கள பேரினவாத அரசின் சனாதிபதி ஒரு இனப்படுகொலையாளி என்றும் விண்ணதிர முழங்கியவாறு பிரித்தானிய வீதிகளில் பேரணியாக சென்ற தமிழர்கள் சர்வதேச சமூகத்திற்கும் பிரித்தானிய அரசிற்கும் அவர்களின் மொழியில் உரத்துச் சொல்லப்பட்ட போராட்டமாக இது அமைந்திருந்தது.

மேலும் கட்டுப்படுத்த முடியாத மக்கள் வெள்ளத்துடன் பிரித்தானியக் காவற்துறை போராடிக்கொண்டிருந்த நிலையில் குறித்த இப்பேரணியானது பிரித்தானிய மன்னர் மாளிகையை அண்மித்ததும் மக்கள் பேரலையைக் கட்டுப்படுத்த முடியாத காவற்றுறை திண்டாடியது.

ஒட்டுமொத்தத்தில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட இம்மாபெரும் மக்கள் போராட்டமானது தமிழர்களின் வேணவா தமிழீழமே என்பதை முரசறைந்து நின்றது என்பதே நிதர்சனமானது

தொடர்ந்தும் அனைத்துலரீதியில் நடத்தப்படும் அனைத்துப் போராட்டவடிவங் களிலும் மக்கள் பேரெழுச்சியோடு ஒன்றிணைந்து, மாவீரர்களின் இறுதி இலட்சியமான தமிழீழத் தனிநாட்டை மீட்டெடுப்போமென உறுதியெடுத்து பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்

இப்போராட்ட நிறைவில் அனைத்துலக இராதந்திர கட்டமைப்பின் பிரித்தானியா செயற்பாட்டாளரின்உரை ஆங்கிலத்தில் இடம்பெற்றதை தொடர்ந்து யேர்மனி நாட்டினைச் சார்ந்த வேற்றின அரசியற் செயற்பாட்டாளர் ஒருவரின் உரை மற்றும் அனைத்துலகத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. பொ.மகேஸ்வரன் அவர்களின் எழுச்சியுரையும் இடம்பெற்று இறுதியில் நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடல் இசைக்கப்பட்டு தாயகம் நோக்கிய பயணத்திற்கு உறுதிமொழி எடுத்து இந்த பேரணி எழுச்சியுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.



இன்று*05/02/2024* தன்னாட்சிக்கான எழுச்சிப் போராட்டத்தின் கொள்கைப் பிரகடனத்தையும் அரசியல் விருப்பையும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழீழ மக்களாகிய எமக்கு அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திய கடிதத்தினை பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை, அனைத்துலகத் தமிழ் இளையோர் அமைப்பு, அனைத்துலக இராசதந்திரக் கட்டமைப்பு-தமிழீழம் ஆகியவை இணைந்து பிரித்தானிய பிரதமருக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும் வழங்கியதோடு, பிரித்தானிய அரசாட்சியில் எடுக்கப்பட்ட தவறான அரசியல் முடிவே தமிழினம் இன்று வரை சந்தித்து வரும் சிங்கள தேசத்தின் இனவழிப்பிற்கு காரணமாக அமைந்து வருகின்றது என்பதையும் வரலாற்று ரீதியாக எடுத்துக்காட்டியது

• • •

# மேற்குலகின் வெளிவேடத்தைத் தோலுரித்துக்காட்டிய ஹூத்திப் போராளிகள்

தமிழில்: ஜெயந்திரன்

அவுஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளின் ஆதரவுடன், பிரித்தானியாவும் அமெரிக்காவும், ஜனவரி 12ம் திகதியிலிருந்து யேமன் மீது மேற்கொண்டுள்ள விமானத்தாக்குதல்கள் அனைத்துமே, மேற்குலக நாடுகள் எவ்வாறு மனித உயிர்களுக்கு அப்பால் பணத்துக்கும் இலாபத்துக்கும் முன்னுரிமை கொடுக்கின்றன என்ற உண்மையை வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கின்றன.



மனிதகுல வரலாற்றில் முதல் தடவையாக நேரலையில் காண்பிக்கப்பட்ட இனவழிப்பாக காஸாவில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் கொடூரமான போர் விளங்குகிறது. கடந்த ஒக்ரோபர் 7ம் திகதியிலிருந்து நடைபெற்றுவரும் இப்போரின்காரணமாக இதுவரை27000 பாலஸ்தீன உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்கின்றன. இவர்களில் அதிகமானோர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். காஸாப் பிரதேசத்தின் பெரும் பகுதியில் தற்போது எஞ்சியிருப்பது எல்லாம் கட்டடங்களின் இடிபாடுகள் மட்டுமே. இஸ்ரேல் மேற்கொண்டுவருகின்ற ஈவு இரக்கமற்ற தாக்குதல்களின் காரணமாக, ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் இல்லிடங்களைவிட்டு இடம் பெயர்ந்திருக்கிறார்கள். காஸாப் பிரதேசத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட முழுமையான முற்றுகை, உயிர் பிழைத்தவர்களைப் பட்டினியின் விளிம்புக்குக் கொண்டுசென்றிருப்பது மட்டுமன்றி, எந்த வித மயக்க மருந்துகளின் உதவியின்றியும், தொற்று நீக்கம் செய்யப்படாத உபகரணங்களைக் கொண்டும் காயப்பட்டவர்க ளின் அவயவங்களை அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றுவதற்கும், மருத்துவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறான ஒரு மனிதகுலப் பேரழிவைக் கண்டும், இந்த மக்களின் துயரைத் துடைக்க மேற்குலக அரசுகள் எதுவும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. உண்மையைக் கூறுவதாயின், எத்தனை பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டாலும், அமெரிக்க அதிபரான ஜோ பைடனும் பிரித்தானிய பிரதம மந்திரியான றிஷி சுணக்கும் காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்ற தாக்குலுக்கு எந்தவித நிபந்தனையுமின்றித் தொடர்ந்தும் தமது ஆதரவைத் தாம் வழங்குவோம் என்று சூளுரைத்திருக்கிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான அப்பாவிப்பொது மக்கள் கொல்லப்பட்ட போதும், அங்கவீனர்களாக ஆக்கப்பட்ட போதும் வாளாவிருந்த இந்த நாடுகள், மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பாம் அல் மண்டேப் நீரிணை ஊடாகச் சென்ற வர்த்தகக் கப்பல்கள் மீது ஹூத்திப் போராளிகள் தாக்குதல்களை மேற்கொண்டபோது தான் இந்த மேற்குலக நாடுகள் செயற்படத் தொடங்கியிருக்கின்றன. ஆறாக ஓடிய மத்திய கிழக்குப் பிரசைகளின் இரத்தைத்தை விட, ஹூத்திப் போராளிகளின் தாக்குதல்களின் காரணமாக கப்பல் போக்குவரத்துக்கான செலவில் இழக்கப்பட்ட டொலர்களும் பவுண்டுகளுமே இந்த ‘சுதந்திர உலகுக்கு’ முக்கியமாக இருந்திருக்கிறது.

செங்கடல் ஊடாக சூயஸ் கால்வாய்க்கு இட்டுச்செல்கின்ற பாப்-அல்-மண்டேப் நீரிணை, பன்னாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தவரையில், அதிமுக்கியத்துவம்வாய்ந்தகடல்வழிப்பாதையாக திகழ்கிறது. வளைகுடாப் பகுதியின் அதிகமான பெற்றோலிய ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் இயற்கை வாயு போன்றவை உள்ளிட்ட பூகோள ரீதியாக மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தின் 12 வீதம் இந்த நீரிணையூடாகவே மேற்கொள்ளப்படுவது மட்டுமன்றி மேற்கொள்ளப்படும் வர்த்தகம் வருடம் ஒன்றுக்கு ஒரு ட்ரில்லியன் பெறுமதியை எட்டுகின்றது என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியது ஆகும்.

மத்தியதரைக்கடலின் கிழக்குப் புறமாக அமைந்திருக்கின்ற இஸ்ரேல், தனது பெருமளவான சரக்குகளின் வர்த்தகத்துக்கு இந்தக் கடற்பாதையையே நம்பியிருக்கிறது. தமது வர்த்தகத்துக்கு இந்த நீரிணையில் இஸ்ரேல் தங்கியிருப்பதுவே தாம் இஸ்ரேலுக்குச் செல்கின்ற மற்றும் இஸ்ரேலுக்குச் சொந்தமான கப்பல்கள் மேல் தாக்குதலைத் தொடுக்கக் காரணமானது என்கின்றார்கள் ஹூத்திப் போராளிகள். காஸாவில் ஓர் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த அல்லது போதிய மனிதாய உதவிகளை அந்தப் பிரதேசத்துக்குள் அனுமதிக்க இஸ்ரேல் இணங்கும் பட்சத்தில் தாக்குதல்களை நிறுத்தத் தாம் ஆயத்தமாக இருப்பதாக ஹூத்திகள் தெரிவிக்கின்றனர்.

ஹொலிவூட்டின் அதிரடித் திரைப்படங்களில் காட்டப்படுவது போன்று செங்கடல் ஊடாகச் சென்ற கப்பல்கள் மீது ஹூத்திகள் மேற்கொண்ட தாக்குதல்கள் எந்த அப்பாவிப்பொதுமக்களின் இழப்புக்கும் காரணமாக அமையவில்லை. மாறாக இஸ்ரேலுக்கும் அதற்கு முண்டுகொடுக்கும் நாடுகளுக்கும் கணிசமான பொருண்மிய இழப்பை அவை ஏற்படுத்தியிருக்கின்றன. ஹூத்திகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து, இஸ்ரேலின் துறைமுகங்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்ற எய்லாட் துறைமுகத்தின் செயற்பாடுகள் 85 வீத வீழ்ச்சியைக் கண்டிருப்பதாக தற்போது கணிக்கப்படுகிறது.

இவ்வாறான தாக்குதல்கள் ‘பிரித்தானிய பெற்றோலியம்’ மற்றும் ‘ஷெல்’ உள்ளிட்ட உலகின் முன்னணிகப்பல்நிறுவனங்கள், செங்கடல்ஊடான தங்கள்கப்பல்போக்குவரத்துகளைமுற்றாக நிறுத்த நிர்ப்பந்தித்திருக்கின்றன. இவ்வாறான கப்பல் போக்குவரத்துகள் முற்றாக நிறுத்தப்பட்டதன் காரணத்தினால், பொருட்களின் விநியோகத்தில் கணிசமான தாமதங்கள் ஏற்பட்டது மட்டுமன்றி, கப்பல் போக்குவரத்துச் செலவில் என்றுமில்லாத அதிகரிப்பைத் தோற்றுவித்திருக்கிறது. பிந்திக் கிடைத்த தரவுகளின் படி, இந்தக் கப்பல் பாதையில் மேற்கொள்ளப்படும் கப்பல் போக்குவரத்து தாக்குதலுக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும் போது, 329 வீத அதிகரிப்பைச் சந்தித்திருக்கிறது.

மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் உள்நாட்டிலும் மத்திய கிழக்குப் பிரதேசத்திலும், ஹூத்திகளின் செல்வாக்கை மேலும் அதிகரித்திருக்கிறது என்பது மட்டுமன்றி, மேற்குலக ஏகாதிபத்திய வாதிகளின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகப் போராடக்கூடிய ஒரு தரப்பாக அவர்களை அடையாளங் காட்டியிருக்கி றது.

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்ற இனவழிப்புப் போரையும், பாலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் இவை எல்லாவற்றையுமே மேற்குலக நாடுகள் இலகுவில் தவிர்த்திருக்க முடியும். ஆனால், பாலஸ்தீனர்களைக் கொல்ல வேண்டாம் என்று இஸ்ரேலுக்குச் சொல்வதற்குப் பதிலாக, உலகிலேயே மிகவும் வறிய நாடுகளில் ஒன்றான யேமனின் மீது குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்ள இந்த மேற்கு நாடுகள் முடிவுசெய்திருக்கின்றன.

தமது நட்பு நாடுகளில் ஒன்று மனிதப் படுகொலையை மேற்கொள்வதைக் கண்டும் காணாமல் இருப்பது மட்டுமன்றி, மத்திய கிழக்கில் வாழுகின்ற மக்களின் உயிர்களைவிட மேற்குலகத்தின் பெருநிறுவனங்களின் இலா



பத்துக்கே இந்த மேற்குலக நாடுகள் அதிக முன்னுரிமை கொடுக்கின்றன என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

உண்மையைச் சொல்லப்போனால் இவை எதுவுமே ஆச்சரியத்தைத் தரவில்லை.

முதலாளித்துவத்தைப் பொறுத்தவரையில், மனித உயிர் - பாலஸ்தீனியராக இருந்தாலென்ன, யேமனைச் சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன அல்லது அமெரிக்காவையோ அன்றேல் பிரித்தானியாவையோ சேர்ந்ததாக இருந்தாலென்ன அது வெறும் பண்டமாகவே பார்க்கப்படுகிறது.

மேற்குலக அரசுகள் எல்லா விழுமியங்களையும் விட பொருண்மிய ஆதாயத்துக்கே முன்னுரிமை வழங்குகின்றன. இங்கே ஒரு புள்ளிவிபர உயிரின் பெறுமதி என்பது சாமான்ய விடயமாகப் பார்க்கப்படுகிறது. ஒரு புள்ளிவிபர உயிரின் பெறுமதி என்று சொல்லும் போது அது, ஒரு மனித உயிரைக் காப்பாற்ற சமூகம் எவ்வளவு பணத்தைச் செலவு செய்ய ஆயத்தமாக இருக்கிறது என்பதைக் குறிக்கும். இவ்வாறான அணுகுமுறை மனித உயிருக்கு ஒரு பணப்பெறுமதியைத் தீர்மானிக்கிறது. இந்தப் பணப்பெறுமதியின் அடிப்படையிலேயே அரச கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. ஏதாவது ஒரு உயிர் காப்பு நடவடிக்கை அது காக்க முயலும் உயிர்களின் புள்ளிவிபர உயிரின் பெறுமதியைவிட அதிகமானால், அவ்வாறான ஒரு நடைமுறை கைவிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 1975இல், விபத்துகள் ஏற்படும் போது சேதங்களைக் குறைப்பதற்காக பாரவூர்திகள் அனைத்திலும் ஒரு பாதுகாப்புச்சட்டத்தைப் பொருத்த வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்ட போது, அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த ஏற்படும் செலவு, அதனால் காப்பாற்றப்படும் உயிர்களின் பெறுமதியை விட அதிகமாகும் என்று கணிப்பிடப்பட்டதன் காரணத்தினால், போக்குவரத்துக்கான அமெரிக்க திணைக்களம் அந்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இளைஞர் அபி ... தொடர்ச்சி ...

உழைக்கும் படையைச் சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்ட வரலாறு கறைபடிந்த அத்தியாயமேயாகும். இத்தகைய நிலைமைகளை படிப்பினையாகக்கொண்டு இளைஞர்களுக்கு உரிய இடமளிப்பதோடு அவர்களின் கருத்துக்களை முறையாக உள்வாங்கிக்கொண்டு செயற்படுவதும் மிகவும் அவசியமாகும். இளைஞர் தலைமைத்துவமும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

மலையக பெருந்தோட்ட இளைஞர்களின் பல்துறை தேவைகளுக்கும் முறையாக முன்னுரிமையளித்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் அவர்களின் மனிதவள அபிவிருத்தி தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியதன் அவசியப்பாட்டினை பேராசிரியர் மு.சின்னத்தம்பி வலியுறுத்தி இருக்கின்றார். இதேவேளை இளைஞர்களின் மனிதவளத் தேவைகளை இனங்காண்கையில் இளைஞர்களின்அபிலாஷைகளுக்கு மட்டுமன்றி தோட்டங்களின் தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கும் அவர் இவ்வாறானமனிதவளஅபிவிருத்திதேவைகளில் சிலவற்றை பட்டியல்படுத்தியுள்ளார்.

தோட்டத்திற்கு வெளியே வேலை வாய்ப்புகளைபெறுவதற்குதேவையானவினைத் திறன்களை அவர்களிடையே அபிவிருத்தி செய்தல், தோட்டங்களுக்கு வெளியே சுய தொழில்களில் ஈடுபடுவதற்கும், வருமானம் உழைப்பதற்குமான அவர்களது முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்தல், தோட்டங்களுக்குள்ளேயே மேலதிக வருமானத்தை உழைத்துக் கொள்வதற்குத் தேவையான வினைத்திறனை உருவாக்குதல், தோட்ட விவசாயத்திற்கும் வேறு உற்பத்தித்துறை நடவடிக்கைகளுக்கும் தேவையான வினைத் திறன்களை மேம்படுத்துதல், தோட்டங்களோடு தொடர்பான ஆதாரத்தொழில் சார்ந்த வினைத் திறன்களை மேம்படுத்துதல், தோட்ட இளைஞர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதன் மூலமும், பெண்களின் பங்கெடுப்பு, பால் தொடர்பான பிரச்சினைகள், மேலதிக வருமானத்தை உழைத்தல் என்பன குறித்த அவர்களது அறிவினை வளர்ப்பதன் மூலமும் தோட்டக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

இத்தகைய மனிதவள அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்யும் விதமான புதிய பயிற்சி நெறிகள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கும் பயிற்சி நெறிகளை தரமுயர்த்துவதன் மூலமும் இளைஞர்களின் தொழிற்சார் பயிற்சி, தொழில்நுட்ப வினைத் திறன், பொதுஅறிவு என்பன உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிடும் பேராசிரியர் சின்னத்தம்பி ஐந்து வகையான பயிற்சி நெறிகளையும் இனங்கண்டுள்ளார்.

அவையாவன:-

அறிவுசார் பயிற்சித் திட்டங்கள்,மையவினைத்திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள், தொழில்சார் பயிற்சித் திட்டங்கள், முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சித் திட்டங்கள், தோட்ட வேலைகளுக்கு பயன்படக்கூடிய பயிற்சித் திட்டங்கள் என்பன அவை ஐந்துமாகும். எனவே மேற்கண்ட விடயங்களை கருத்தில் கொண்டு மலையக இளைஞர்களுக்கான அபிவிருத்தி செயற்றிட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்பதோடு சமூகத்தில், நாட்டில் உரிய இடம் அவர்களுக்கு வழங்கப்படுதலும் வேண்டும். இதைவிடுத்து இளைஞர் புறக்கணிப்பு நிலைகள் மேலோங்குமிடத்து அதனால் ஏற் படும் பாதக விளைவுகளை சமூகமும், நாடும் சந்திக்க வேண்டி யேற்படும். இதேவேளை இளைஞர்களும் சமூகப் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

• • •

## ஜே.வி.பி.யை ... தொடர்ச்சி ...

கம்யுனீஸ்ட் கட்சியில் இருந்த போது கூட செயற்பட்டார். அவர் ஆரம்பகாலத்திலேயே தமிழர்களுடைய நியாயமான அபிலாஷைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தவர்.

இடைப்பட்ட காலத்தில் அவர் தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை குறித்தும் பேசியிருக்கின்றார். ஆனால், அவையெல்லாம் நிலையானதாக இருக்கவில்லை. அவர்களிடம் நிலையாக இருந்தது எதுவென்றால், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக்காண்பதற்கான முயற்சிகளை எப்போதும் எதிர்த்து வந்ததுதான்.

அந்த வகையில் தான் அவர்கள் நடத்திய ஐந்து முகப்புக்களில் ஒன்று இந்திய விஸ்த்தரிப்பு வாதம் என்பது தொடர்பாக போதிக்கப்பட்டது. இலங்கையைப் பொறுத்த வரையில்பாட்டாளி வர்க்கம் என்றால் அது மலையக தோட்ட தொழிலாளர்கள் தான் பொருத்தமாக இருக்கும். இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலைமையில் வாழ்ந்து வந்தவர்கள் அவர்கள். அந்த மக்களையே இந்தியாவினுடைய ஐந்தாம் படை என ஜேவிபி அடையாளப்படுத்தியது. இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு கருவியாக தான் அவர்கள் மலையக மக்களை நோக்கினார்கள்.

அதற்கு மேலாக மலையகத்தில் இருக்கின்ற தேயிலைச்செடிகளை பிடுங்கி விட்டு அதற்கு பதிலாக உருளைக்கிழங்கு போன்றவற்றை பயிரிட்டு சிங்கள தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்போம் என்ற கோஷத்தை அவர்கள் முன்வைத்தார்கள். சிங்கள பௌத்த சமூகத்திடம் இந்தியா குறித்த ஒரு பயம் நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. அந்தப் பயத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்ற ஒரு அரசியலை அவர் முன்னெடுத்தார்.

என்ன பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட எந்த ஒரு முயற்சியையும் ஜேவிபி ஆதரித்தது இல்லை.

இலங்கை - இந்திய உடன்படிக்கை தொடர்ந்து மாகாண சபைகள் கொண்டுவரப்பட்ட போது, தங்களுடைய இரண்டாவது கிளர்ச்சியை ஜேவிபி மேற்கொண்டது. அவர்கள் பின்னர் மாகாண சபைகளில் பங்கேற்கின்ற ஒரு நிலைமையும் உருவாகியது. சிங்கள பௌத்த கருத்தியலை முன்னெடுக்கும் ஒரு குட்டி முதலாளித்துவ கட்சியாகவே ஜேவிபி செயல் பட்டது. அதன் விளைவாகவே இந்திய வஸ்தரிப்பு வாதம் என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தார்கள்.

ஆனால் உண்மை காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் உருவாகியிருக்கின்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்ப தாங்கள் மாறி கொள்வதாக அவர்கள் சொல்லிக் கொள்கின்றார்கள். இந்தியாவினால் அரவணைக்கப்படுகின்ற ஒரு சக்தியாக இன்று அவர்கள் மாறி இருப்பது பெரிய ஒரு மாற்றம் என்று தான் சொல்ல வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் இயல்பாகவே காணப்படுகின்ற இந்திய எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் மூலமாகவே தங்களுடைய இந்திய விஸ்தரிப்பு வாதம் போன்ற கருத்துக்களை அவர்கள் முன்வைத்தார்கள்.

தமிழர் பிரச்சனைக்கான தீர்வு உட்பட பல்வேறு விடயங்களிலும் அவர்களுடைய நிலைப்பாட்டில் அவ்வாறான மாற்றங்கள் இடம்பெற்றிருக்கிறது என்பதை அவர்கள் நாடு திரும்பிய பின்னர் முன்வைக்கக்கூடிய கருத்துக்களில் இருந்து தான் நாங்கள் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கும்

• • •

## ஈழத்தமிழர் ... தொடர்ச்சி ...

நிலைக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டு இடம்பெறும் சட்டமன்ற தேர்தலில் கட்சி போட்டியிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் அதாவது பிறப்பால் எல்லா உயிரும் சமன் என்ற தத்துவத்துடன் பிறப்பெடுத்திருக்கும் இந்த அரசியல் பிரவேசம் என்பது மக்கள் சக்தியாக எழுவதே இன்றைய தேவையாகின்றது.

தற்போதைய தமிழக அரசியலில் பலம் பலவீனம் அறிந்து சரியான தருணம் பார்த்து அரசியலில் குதித்திருக்கும் விஜய் 2026 ஆம் ஆண்டு இடம்பெறும் தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்துவார் என்பது தெளிவாகின்றது. 2024 ஆம் ஆண்டு தேர்தலும் அவரின் கட்சியின் ஆதரவுக்காக ஏங்கும் நிலை ஒன்று தமிழகத்தில் ஏற்படலாம்.

தமிழகத்தில் ஏற்படும் மாற்றம் என்பது ஈழத்தமிழர்களின் அரசியலில் எப்போதும் எதிரொலிக்கும், அதேபோலவே ஈழத்தமிழர்களின் அரசியலும் தமிழகத்தில் எதிரொலிப்பதுண்டு. அதற்கு சிறந்த உதாரணம் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல். எனவே ஈழத்தமிழர்களும் ஒரு மாற்றத்தையே விரும்புகின்றனர்.

• • •

## பலமான ... தொடர்ச்சி ...

சட்டத்துறையுள்ளது என்பதை இங்கு காண முடியும்.

இவ்வாறு கிழக்கில் தமிழர்கள் எதிர் கொண்டுவரும் பல்வேறு வகையான அடக்கு முறைகளை கண்டுகொள்ளாத நிலையில் தங்களது தனிப்பட்ட அரசியல் செல்வாக்கினை நிலை நிறுத்தும் வகையிலேயே தமிழ் தேசிய அரசியல்இருந்துவருகின்றது. குறிப்பாக இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நிலைமையானது எதிர்காலத்தில் கிழக்கில் தமிழர்களின் அரசியலில் பாரிய சிக்கல் நிலை மைகளை ஏற்படுத்தப்போகின்றது என்பது மட்டுமே உண்மையான நிலையிலிருக்கின்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியைப் பொறுத்த வரையில் 2015ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையிமையினை இன்று காணமுடியவில்லை.

ரணில் விக்ரமசிங்கவின் பிரித்தாலும் தந்திரத்தின் மூலம் இலங்கை தமிழரசுக்கட்சியையும் தமிழ் தேசிய கூட்டமைப்பினையும் சிதைவடையச்செய்துள்ளது டன் அவர்கள்மீது தமிழ் மக்களின் உணர்வினையும் சிதைக்கும் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையில் எதிர்காலத்தில் அனைத்து தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் இணைந்துசெயற்படுவதன் மூலமே கிழக்கில் தமிழர்களின் இருப்பினை தக்கவைக்கமுடியும். தமிழீழ விடு தலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அனைவரும் ஒரே நோக்கத்திற்காகவே போராடத் தொடங்கியிருந்தனர்.

2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் கடந்தகால செயற்பாடுகளை, தவறுகளை மறப்போம் மன்னிப்போம் என்ற நிலைக்கு வந்ததன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதனை உடைத்து இன்று சின்னாபின்னமாகியுள்ளதானது வாக்கு அரசியல் மட்டும் அல்ல தமிழர்களின் உரிமையும் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

இன்று கிழக்கில் உருவாகியுள்ள நிலைமையினை எதிர்கொள்வதற்கு பலமான தமிழ் தேசிய சக்தி கிழக்கில் உருவாக வேண்டும். அதற்காக அனைவரும் இணைந்து செயற்படமுன்வர வேண்டும்.

• • •

## மாலைதீவில்... தொடர்ச்சி ...

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற முக்கிய பிராந்திய நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைப் பெறுவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்தக்கூடும், இது இராஜதந்திர மற்றும் பொருளாதார போட்டியை அதிகரிக்க வழிவகுக்கும். இவ்வாறான போட்டி ஒன்று ஏற்கனவே அதிகாரத்துடன் நிலைமையில் தற்போது இடம்பெற்றுள்ள நகர்வுகள் இதனை மேலும் தீவிரமாக்கலாம்.

தற்போதைய நடவடிக்கைகள் பிராந்தியத்தில் ஆயுதப் போட்டியைத் தூண்டலாம், இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகள் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் தங்கள் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துகின்றன.

இந்த நிலைமைகள் நீண்ட காலத்திற்கு எப்படி அமையும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இருப்பினும் நிதானமான இராஜதந்திர நகர்வுகள், திறந்த தொடர்பு மற்றும் சர்வதேச கடல்சார் சட்டத்தை பின்பற்றுதல் ஆகியவை பிராந்திய ஸ்திரத்தன்மையை பேணுவதற்கும், விரிவாக்கத்தைத் தடுப்பதற்கும் முக்கியமானவை.

இந்தியப் பெருங்கடலின் சிக்கலான புவிசார் அரசியல் நிலப்பரப்பில் உருவாகிவரும் இந்த பதட்ட நிலைமையை தவிப்பதற்கு, பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதும், பரஸ்பர புரிதலை வளர்ப்பதும் இன்றியமையாததாக இருக்கும்.

• • •

## மேற்குலகின்... தொடர்ச்சி ...

ஆலோசனையை நிராகரித்தது.

அமெரிக்காவில் வாழ்கின்ற பொதுமக்கள் முதலாளித்துவ மேடையில், தவிர்க்கப்படக்கூடிய காரணங்களால் சாவடைவதை அமெரிக்கா சகித்துக்கொள்கிறது என்றால், செங்கடலில் மேற்குலகத்துக்கு எதிரான ஒரு குழுவிடமிருந்து தமது வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாக்க ஒரு விசேட படையை ஏற்படுத்தியிருப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயமாகத் தெரியவில்லை.

மேலும் மனித உயிர்களை, அதுவும் மேற்குலகத்தைச் சாராத மனித உயிர்களைப் பாதுகாக்க உருப்படியான செயற்பாடுகள் எதனையும் மேற்குலக அரசுகள் செய்யாத ஒரு சூழமைவில், பொருண்மிய நலன்களுக்காக போர் தொடுப்பது என்பது ஒன்றும் புதிய விடயமாகத் தெரியவில்லை. உதாரணமாக 2003 ஈராக்குக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போர், பெரிய எண்ணெய்க்காகத் தொடுக்கப்பட்ட போராகவே பார்க்கப்படுகின்றது. அந்தப் போர் ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஈராக்கிய மக்களைக் கொன்றது மட்டுமன்றி, அங்கு அது என்றுமில்லாத ஒரு உறுதியற்ற தன்மையைத் தோற்றுவித்து, மேலும் அதிக போர்களையும் துன்பத்தையும் ஏற்படுத்தியது. ஆனால் ஒரு சில பெற்றோலியப் பெருநிறுவனங்களுக்கு பில்லியன் கணக்கிலான இலாபத்தை அது பெற்றுக்கொடுத்தது.

அமெரிக்காவுடன் இணைந்து யேமனைத் தாக்க முடிவுசெய்த போது, "இவ்வாறான தாக்குதல்களைநாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்று பிரித்தானிய பிரதமரான சுணக் தெரிவித்தார். ஒரு நெருக்கடி நிலையின் போது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் ஒரு தெரிவு தான்.

அவரது கூற்றிலுள்ள வெளிவேடத்தன்மை உண்மையில் திகைப்புக்குரியது.

தாம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, ஹூத்திப் போராளிகள் முதலாளித்துவ மேற்குலகத்துக்கு உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவாறு, அதன் பொருண்மியத்தில் கைவைத்தனர். இவ்வாறு பாலஸ்தீனர்கள் மேல் ஈவு இரக்கமற்ற தாக்குதல்களைத் தொடுத்துக்கொண்டிருக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களை தடுக்க அவர்கள் முடிவுசெய்தனர்.

நான்கு நீண்ட மாதங்களாக பாலஸ்தீனர்களை இஸ்ரேல் கொன்று அவர்களை இடம்பெயரச்செய்து, இரண்டு மில்லியன்களுக்கும் அதிகமான மக்களை காஸாவில் பட்டினி ஆபத்துக்கு உள்ளாக்கியது. அவ்வாறான ஒரு பின்புலத்தில் எவ்வாறான நடவடிக்கையும் எடுக்காதது தொடர்பாக சுணக் திருப்தியாகவே இருந்தார். பாலஸ்தீனத்துக்கு ஒப்பீட்டளவில் மிகச் சிறிய உதவியையே அவர் அனுப்பினார்.

செங்கடலின் ஊடாக மேற்கொள்ளப்படும் வர்த்தகம் மீது ஹூத்திப் போராளிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் இஸ்ரேல் மேற்கொண்ட இனவழிப்பை நிறுத்தவில்லை என்பது மட்டு மன்றி, காஸாவில் செத்துக்கொண்டிருந்த பாலஸ் தீனருக்கு எந்தவித உயிர்காப்பு நலனையும் கொடுக்கவில்லை. அப்படியிருந்த போதிலும், மேற்குலகம் உண்மையில் எப்படிப்பட்ட விடயங் களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது என்பதை அதிலும் குறிப்பாகப் பாலஸ்தீன மக்களின் உயிருக்கு அவை எந்தவித முன்னுரிமையையும் கொடுப்பதில்லை என்ற அப்பட்டமான உண்மையையும் அது தோலுரித்துக் காட்டியிருக்கிறது.

## முஸ்லீம் மக்... தொடர்ச்சி ...

மற்றும் வர்த்தக நிலையங்களை இந்திய அரசு கனரக இயந்திரங்கள் மூலம் இடித்து அழித்துள்ளது. 697 பேர் வீடுவாசல்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். அவர்களுக்கு இழப்பிடுகள் கூட வழங்கப்படவில்லை.

இந்திய அரசின் மதவாதக் கொள்கைகளுக்கு எதிராக போராடியவர்ளுக்கான தண்டனையாக இந்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

அசாம், குஜராத், டில்லி, மத்திய பிரதேசம் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களிலும் அதிகளவான கட்டிடங்கள் இஇடிக்கப்பட்டுள்ளதாக லண்டனைத் தளமாகக் கொண்ட மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## சீனாவுக்கும்... தொடர்ச்சி ...

தலைவருடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக இருந்ததுடன் இரு நாடுகளும் தமது உறவுகளை வலுப்படுத்தவும் வழி ஏற்படுத்தியுள்ளது. ஜி-20 மற்றும் சாங்காய் கூட்டமைப்பு நாடுகளின் அமைப்புக்களின் தலைமை பதவிக்கு இந்தியா வருவதற்கு பீஜிங் தனது ஆதரவுகளை வழங்கியிருந்தது.

எதிர்காலத்தில் இரு நாடுகளும் சுற்றுலாத் துறை, முதலீடுகள் போன்ற விடையங்களில் இணைந்து பணியாற்ற இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மூன்று கட்ட... தொடர்ச்சி ...

பின்னர் இஸ்ரேல் படையினர் காசாவை விட்டு வெளியேறவேண்டும்.

மனிதாபிமான உதவிகளை சென்றடைவதை இஸ்ரேல் அனுமதிக்கவேண்டும் இவை அனைத்தும் 45 நாட்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற திட்டத்தை ஹமாஸ் முன் வைத்திருந்தது. ஆனால் இஸ்ரேல் அதனை நிராகரித்ததுடன், முழுமையான வெற்றியை அடையப்போவதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி ...

அமெரிக்க விமானம் ஏஜிஎம்-114 எனப்படும் கெல்பயர் எனப்படும் 3 மிக நவீன ஏவுகணைகளை வானகம் மீது ஏவியுள்ளது.

சிரிய ஜோர்தான் எல்லையில் இருந்து அமெரிக்காவின் ரவர் 22 என்ற தளத்தின் மீதான ஏவுகணைத் தாக்குதலுக்கு இந்த அமைப்பின் கட்டளை அதிகாரியே பெறுப்பு என அமெரிக்கா தெரிவித்திருந்த நிலையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் அபு பகீர் மிகவும் மூத்த தலைவராவார். 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஈராக்கில் வைத்து ஈரானின் காட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி குசேம் சொலைமனி கொல்லப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட முக்கிய தலைவர் பகீர் ஆவார்.

கடந்த ஒக்டோபர் மாதம் ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு பின்னர் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை தொடர்ந்து ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள எதிர்ப்பு படையினர் அமெரிக்கத் தளங்கள் மீது 170 இற்கு மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அதில் பெருமளவான படையினர் காயமடைந்தபோதும் கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டிருந்தனர் 40 பேர் காயமடைந்திருந்தனர். அதனை தொடர்ந்தே அமெரிக்கா ஈராக் மற்றும் சிரியா மீது தனது தாக்குதல்களை தீவிரப்படுத்திவருகின்றது.

ஈராக்கில் 2500 அமெரிக்க படையினரும், சிரியாவில் 900 அமெரிக்கப்படையினரும் நிலை கொண்டுள்ளனர்.

## அமெரிக்கா... தொடர்ச்சி ...

கடந்த வாரம் தென்கொரியாவில்அமெரிக்காவின் 3 ஆவது எப்-16 விமானம் வீழ்ந்து நெருங்கிய ஒரு வாரத்திற்குள் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## பெரும் போக... தொடர்ச்சி ...

பெறுகின்றது நெல்லுக்கான உத்தரவாத விலை இன்மை தற்போது ஒரு மூடை 5500 வரை செல்கிறது வெட்டுக் கூலி 17000 ரூபா என பல செலவுகள் போக மிஞ்சி இருப்பது எதுவுமே இல்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இப் பகுதியில் 2000 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவே பசளைகளை உரிய நேரத்தில் பசளைகளாக தருமாறும் தரமான கிருமி நாசினிகளை விவசாயிகளுக்காக குறைந்த விலையில் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஆயுத பற்றாக்கு ... தொடர்ச்சி ...

வெற்றியீட்டினால் மீண்டும் ஒரு பனிப்போர் காலத்திற்குள் நாம் செல்ல வேண்டிவரும் அது எமக்கு ஆபத்தானது.

நேட்டோ நாடுகளிடம் ஒரு ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியம். ஆனால் நேட்டோ ரஸ்யாவுடன் போர் செய்ய விரும்பாது. நாம் ஒருபோதும் ரஸ்யாவுடன் போர் புரிய மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் மிகப்பெருமளவான ஆயுத உதவிகளுடன் உக்ரைன் படையினர் கடந்த வருடம் மேற்கொண்ட தாக்குதல் முயற்சிகள் தோல்வியில் முடிந்த நிலையில் ஜேர்மனியின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

கடந்த வருடம் 215,000 உக்ரைன் படையினர் கொல்லப்பட்டதுடன், 28,000 படைக்கலங்கள் அழிக்கப்பட்தாக ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.